SHANKAR IAS ACADEMY™

The Best IAS Academy In South India SINCE 2004

தமிழ்

ஆகஸ்ட் - 2018

# TNPSC ZERO CURRENT AFFAIRS MAINS

**0%** Effort | **100%** Results

www.tnpscthervupettagam.com

tnpscfeedback@shankarias.in

Available @Bookmark Store.

Plot No 1742, 1st Floor, 18th Main Road, Anna Nagar West, Chennai – 600 040

**Contact : 044-43533445 | 044-45543082.**

**Centres** : Chennai - Annanagar & Adyar | Salem | Madurai | Trichy | Coimbatore | Namakkal.

# AUGUST – 2018

## IMPORTANT TOPICS

1) Chief Justice of Madras High court
2) Literary contributions of Dr. Muthuvel Karunanidhi
3) Forest Genetic Resources Tree Park in Tamil Nadu
4) Project Star 2.0
5) 5 Inclusive development Schemes of Tamil Nadu
6) Nodal Agencies for Disaster Early Warning dissemination
7) Kanyashree scheme
8) Importance of NOTA
9) Integrated Child Development Service (ICDS)
10) Benami transaction
11) Powers of Governor
12) Homoeopathy Central Council (Amendment) Bill 2018
13) Seva Bhoj Yojna
14) Oxytocin
15) Pradhan Mantri Ujjwala Yojana
16) One District One Product Scheme
17) WABA
18) Scrub Typhus
19) POSHAN Abhiyan
20) e-cigarettes
21) TReDS
22) Zero Budget Natural Farming
23) BRU Tribe
24) Jal Marg Vikas Project
25) Pradhan Mantri Krishi Sinchai Yojana
26) Ballistic Missile - Interceptor Advanced Area Defence
27) Aerogel
28) Microcystallites
29) Helina
30) International Buddhist Conclave
31) Proxy Voting in India
32) Hydrocarbons Vision 2025
33) Pradhan Mantri Khanij Kshetra Kalyan Yojana
34) Chilika Lake
35) Barak 8 missile
36) REDD+
37) Petcoke
38) CALL FOR CODE
39) Panini Language Laboratory
40) LaCONES
41) Chinna Pillai Perumal
42) NIRF Ranking
43) Healthy State; Progressive India report
44) Zojila Tunnel

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

45) **Environmental Ethics**

46) **Digital North East Vision 2022**

47) **Appellate Tribunal for Electricity**

48) **Project Navlekha**

49) **SC/ST Act**

50) **Deputy Chairman of Rajya Sabha**

51) **Rashtriya Uchchatar Shiksha Abhiyan**

52) **PARIVESH**

53) **National Policy on biofuels**

54) **Pink Bollworm Attack in Cotton**

55) **5G**

56) **123rd Constitutional Amendment Bill**

57) **People (Amendment) Bill, 2017**

58) **Criminal Law (Amendment) Bill, 2018**

59) **State Disaster Management Plan (SDMP) 2018-2030**

60) **Indecent Representation of the Women (Prohibition) Act, 1986**

61) **Sexual harassment of women at workplace (prevention, prohibition and redressal) act 2013.**

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

# ஆகஸ்டு - 2018

## 3 மதிப்பெண் வினாக்கள்

**1. மெட்ராஸ் உயர்நீதி மன்றத்தின் 30-வது தலைமை நீதிபதி யார்? அவரை நியமிப்பதற்கான சட்டபிரிவை குறிப்பிடுக.**

i) நீதிபதி விஜயா கமலேஷ் தகில் ரமணி

ii) மகாராஷ்டிரா மற்றும் கோவா பார் கவுன்சிலிருந்து வந்தவர்.

iii) இரண்டாவது பெண் நீதிபதி (இந்திரா பானர்ஜிக்கு பிறகு)

iv) சட்டப்பிரிவு - 217 - உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி நியமனம் பற்றியது.

**2. முனைவர் முத்துவேல் கருணாநிதியின் இலக்கிய பங்களிப்பினைப் பற்றி எழுதுக.**

| சங்க தமிழ் | பொன்னர் சங்கர் |
|---|---|
| திருக்குறள் உரை | நெஞ்சுக்கு நீதி |
| குறள் ஓவியம் | வெள்ளிக்கிழமை |
| இனியவை இருபது | தென்பாண்டிசிங்கம் |
| ரோமாபுரி பாண்டியன் | |

**3. வன மரபணு வள மர பூங்கா சமீபத்தில் தமிழகத்தில் எங்கு உருவாக்கப்பட்டுள்ளது? அதன் முக்கியத்துவத்தை குறிப்பிடுக.**

i) வண்டலூருக்கு அருகில் கொளப்பாக்கம் - சென்னை.

ii) பூங்காவுக்காக கிழக்கு மற்றும் மேற்கு தொடர்ச்சி மலைகளிலிருந்து 300 வகையான உயிரினங்கள் கொண்டுவரப்பட்டன.

iii) முக்கியத்துவம் : வன சுற்றுச்சூழலை உருவாக்க

iv) 150 நாவல், இலுப்பை மற்றும் நுனா மரங்கள் இடமாற்றி வளர்க்கப்படுகின்றன.

v) கேரளா, கர்நாடகா & ஆந்திரப்பிரதேசத்திலிருந்து அதிக விதைகள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

**4. ஸ்டார் திட்டம் 2.0 வரையறு.**

i) எளிதாக்கப்பட்ட மற்றும் வெளிப்படையான நிர்வாக பதிவு

ii) விரைவான மற்றும் வெளிப்படையான பதிவு சேவை.

iii) இடைதரகர் ஒழிப்பு



SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

iv) பதிவு செயல்முறையில் மகிழ்ச்சியான அனுபவம்
v) தமிழ்நாடு பதிவுத்துறை
vi) சமீபத்தில் முதலமைச்சரின் சிறந்த ஆளுமை விருதை வென்றுள்ளது.

**5. தமிழ்நாட்டின் அனைவரையும் உள்ளடக்கிய மேம்பாட்டுத் திட்டங்களுள் ஏதேனும் ஐந்தினைக் குறிப்பிடுக.**

i) தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதாரத் திட்டம்
ii) தமிழ்நாடு நகர வாழ்வாதாரத்திட்டம்
iii) தமிழ்நாடு திறன் மேம்பாட்டு திட்டம்
iv) தமிழ்நாடு கிராமப்புற மாற்றத் திட்டம்
v) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி நலன் பொருளாதார மேம்பாடு

**6. பேரிடர் முன்னெச்சரிக்கை தகவல் பரப்புவதற்கான பொறுப்பு அமைப்புகளின் பெயர்?**

| பேரிடர்கள் | அமைப்புகள் |
|---|---|
| **புயல்/நிர்வாகவியல்** | இந்திய வானிலை ஆராய்ச்சி துறை |
| **நிலநடுக்கம்** | இந்திய வானிலை ஆராய்ச்சி துறை |
| **வெள்ளம்** | மத்திய நீர் குழு |
| **வறட்சி** | வேளாண் அமைச்சகம் |
| **நிலச்சரிவு** | இந்திய புவி ஆராய்ச்சி மையம் |
| **சுனாமி** | இந்திய தேசிய பேராழி தகவல் சேவைகள் மையம் |

**7. மாநில கன்யாஸ்ரீ திட்டம்**

i) மேற்கு வங்க அரசு அறிவித்தது.
ii) ஆண்டு குடும்ப வருமானம் ரூ.12,00,000-க்கு மிகாமல் உள்ள குடும்பங்களை சேர்ந்த பெண்கள் பலன்களை பெற முடியும்.
iii) இத்திட்டம் குழந்தை திருமணம் குறைவுக்கு வழிவகுத்துள்ளது.
iv) ஐ.நா.பொது சேவை விருதை வென்றுள்ளது.

**8. நோட்டாவின் முக்கியத்துவத்தை வெளிக் கொணர்க.**

i) நோட்டா மக்களின் பேச்சுரிமை மற்றும் கருத்துரிமை பாதுகாப்பை உறுதி செய்கிறது.
ii) 2013-ல் உச்சநீதிமன்ற பரிந்துரையினால் மக்களவை தேர்தலில் நோட்டா தேர்வுமுறை இடம் பெற்றது.

iii) 2014-ல் மாநிலங்களவைக்கான தேர்தலில் நோட்டா தேர்தல் ஆணையத்தால் அறிமுகப்படுத்தப்பட்டது.

iv) எதிர்மறை வாக்கெடுப்பை நடத்தும் 14-வது நாடு இந்தியா.

v) நோட்டா விருப்ப தேர்வு அரசியல் கட்சிகளை நேர்மையான வேட்பாளர்களை தேர்ந்தெடுக்க வலியுறுத்தும். (எ.கா.) குற்ற பின்னணி அற்றவர்களை தேர்ந்தெடுக்க.

vi) இது வாக்குப் பதிவு சதவீதத்தை அதிகரிக்கும்.

## 9. ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டு திட்டம் (ICDS)

i) ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டு திட்டமானது இந்திய அரசின் தலைமையிலான முன்னெடுப்பாகும்.

ii) மத்திய குழந்தைகள் மற்றும் பெண்கள் நல அமைச்சகம் செயல்படுத்துகிறது.

iii) ஊட்டச்சத்து உணவு, சுகாதார பாதுகாப்பு மற்றும் அங்கான்வாடி (பாலர்) கல்வி போன்ற ஒருங்கிணைந்த சேவைகளை வளரும் குழந்தைகளுக்கு வழங்குகிறது.

iv) குழந்தைகள் & தாய்மார்களுக்கு அனைத்து அத்தியாவசிய சேவைகளையும் ஒருங்கிணைந்த அளவில் அவர்களின் கிராமத்தில் வழங்குதல்.

v) நகர்புற & ஊரக மற்றும் பழங்குடிப் பகுதிகளுக்கு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

## 10. பினாமி பரிவர்த்தனை என்றால் என்ன?

i) பினாமி பரிவர்த்தனை என்பது ஒரு நபரின் சொத்திற்கு மற்றொரு நபரால் பணம் செலுத்தப்படுவதாகும்.

ii) எனவே பினாமி பரிவர்த்தனையில், பணம் செலுத்திய நபரின் பெயர் குறிப்பிடப்படுவதில்லை.

iii) நேரடியாக (அ) மறைமுக பினாமி பரிவர்த்தனை ஒருவருக்கு நன்மை பயக்கும்.

iv) பினாமி பரிவர்த்தனை (தடுப்பு) சட்டதிருத்த சட்டம் - 2016 கறுப்பு பணத்தை தடுக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இது நவம்பர் 1, 2016-ல் நடைமுறைக்கு வந்தது.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

**11. ஆளுநரின் அதிகாரங்களை குறிப்பிடுக.**

i) இந்திய குடியரசுத் தலைவரைப் போல், இந்தியாவின் எந்த மாநில ஆளுநரும் சில நிர்வாக, சட்டமியற்றும் மற்றும் நீதி அதிகாரங்களை பெற்றுள்ளனர்.

ii) அவர் சில விருப்ப மற்றும் அவசரகால அதிகாரங்களை கொண்டிருக்கிறார்.

iii) குடியரசுத் தலைவர் மற்றும் ஆளுநர் அனுபவிக்கும் அதிகாரங்களில் ஒரு பெரிய வேறுபாடு என்னவெனில் குடியரசு தலைவர் கொண்டிருக்கும் இராஜதந்திர மற்றும் இராணுவ அதிகாரம் ஆளுநருக்கு இல்லை.

**12. மத்திய ஹோமியோபதி கவுன்சில் (திருத்தம்) மசோதா (அ) சட்ட முன் வரைவு - 2018-ன் சிறப்பம்சங்களை குறிப்பிடுக.**

i) மக்களவையில் மத்திய ஹோமியோபதி கவுன்சில் (திருத்த) மசோதா, 2018 நிறைவேற்றப்பட்டது.

ii) இது மத்திய ஹோமியோபதி கவுன்சில் வாரிய ஆளுநர்களின் குழுவுடன் அதற்கு மாற்றாக குழு ஒன்றை அமைக்க முயல்கிறது.

iii) ஹோமியோபதி கல்வி அமைப்பில் பொறுப்புணர்வு மற்றும் தரத்தை கொண்டு வருவதை நோக்கமாக கொண்டது.

**13. சேவ் போஜ் திட்டம் வரையறு.**

i) மத்திய ஜி.எஸ்.டி மற்றும் ஒருங்கிணைந்த ஜி.எஸ்.டி வரி செலவுகளை (கோவில் பிரசாதங்கள், லாங்கர் (அ) பாந்தாரா மற்றும் மத நிறுவனங்கள் & அவை சார்ந்த நிறுவனங்களால்) வழங்கும் உணவுகளுக்கு ஜி.எஸ்.டி வரி செலவை ஈடுசெய்தல்.

ii) சேவா போஜ் திட்டத்திற்கு 2018-2019 மற்றும் 2019-20 நிதி ஆண்டுகளுக்கு மொத்தமாக ரூ.325 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

iii) மத்திய கலாச்சார அமைச்சகம் அறிமுகப்படுத்தியது.

**14. ஆக்சிடோசின் வரையறு.**

i) ஆக்சிடோசின் என்னும் ஹார்மோன், மூளையில் ஹைபோதாலமஸ் பகுதியில் உருவாக்கப்படுகிறது.

ii) இது மூளையின் அடிப்பகுதியில் அமைந்துள்ள பிட்யூட்டரி சுரப்பியால் சுரக்கப்பட்டு மற்றும் அதனால் கடத்தப்படுகிறது.

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

iii) இது ஒரு ஹார்மோன் மற்றும் மூளை நரம்பியல் கடத்தியாக செயல்படுகிறது.

iv) பிட்யூட்டரி சுரப்பியால் வெளியிடப்படும் ஆக்சிடாசின் இரு வகையான பெண் இனப்பெருக்க செயல்பாடுகளை ஒழுங்குபடுத்துகிறது. (குழந்தை பிறப்பு மற்றும் தாய்ப்பால்).

**15. பிரதம மந்திரி உஜ்வாலா திட்டத்தின் நோக்கங்களை வெளிக்கொணர்க.**

i) பெண்களுக்கு அதிகாரமளித்தல் மற்றும் பெண்களின் சுகாதாரத்தை மேம்படுத்துதல்.

ii) படிம எரிபொருளால் சமைப்பதன் மூலம் அபாயகரமான சுகாதார சீர்கேடுகளை குறைக்கிறது.

iii) தூய்மையற்ற எரிபொருள் எரிப்பதன் மூலம் உட்புற காற்று மாசுபாடு காரணமாக ஏற்படும் பல கடுமையான சுவாச நோய்களிலிருந்து இளம் குழந்தைகளைத் தடுக்கிறது.

**16. 'ஒரு மாவட்டம், ஒரு பொருள்' திட்டத்தினை அறிமுகப்படுத்திய மாநிலம் எது? இத்திட்டத்தின் முக்கியத்துவம் என்ன?**

i) சமீபத்தில் உத்தர பிரதேச மாநில அரசு ஒரு மாவட்டம் - ஒரு பொருள் திட்டத்தினை அறிமுகப்படுத்தியுள்ளது.

ii) ஒரு மாவட்டம் - ஒரு பொருள் திட்டமானது உற்பத்தி மேம்படுத்தல், உற்பத்தி திறன் மற்றும் வருவாய் அதிகரித்தல், உள்ளூர் கைவினைக் கலைகளை பாதுகாத்தல், கலைகளை மேம்படுத்தல், உற்பத்தி தரம் மற்றும் திறன் மேம்படுத்தலை அதிகரித்தல்.

iii) இத்திட்டத்தின் கீழ் ஒரு மாவட்டத்தை சேர்ந்த ஒரு பொருளானது உத்திரப்பிரதேச திவாஸ் நிகழ்ச்சியின்போது நடைபெறும் 3 நாட்கள் கண்காட்சியில் காட்சிப்படுத்தப்படும்.

iv) இது அம்மாநிலத்தின் பொருளாதாரத்தை ஊக்குவிக்கும் மற்றும் 5 லட்சம் புதிய வேலைவாய்ப்புகளை ஆண்டுதோறும் உருவாக்க உதவும்.

**17. WABA - விரிவுபடுத்தி விளக்குக.**

i) தாய்பால் கொடுக்கும் நடவடிக்கைக்கான உலக கூட்டணி.

ii) இன்னோசென்டி பிரகடன அடிப்படையில் தாய்ப்பால் கொடுத்தலுக்கு தனிநபர்கள் மற்றும் பல்வேறு அமைப்புகளுடன் சேர்ந்து ஆதரவளித்தல், பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்தலுக்கு உலகளாவிய

வலைப்பின்னலை ஏற்படுத்துதல், இது சிசு மற்றும் இளம் குழந்தைக்கான உணவு வழங்குதலுக்கு உலக சுகாதார நிறுவனம் / யுனிசெஃபின் பத்து இணைப்புகளுக்கான வழிமுறையாகும்.

iii) ஐ.நா. பொருளாதார மற்றும் சமூக கவுன்சில் உடன் யுனிசெப் இணைந்து சிறப்பு ஆலோசனைக் குழு நிலை நடத்தப்படுகிறது.

## 18. ஸ்க்ரப் டைபஸ் என்றால் என்ன?

i) ஸ்க்ரப் டைபஸ் → ஒரு தொற்றுநோய். இதன் அறிகுறிகள் வைரஸ் காய்ச்சல் போல் இருக்கும்.

ii) எனினும் இது வைரஸால் உருவாவதில்லை. ஆனால் இது ஒரிண்டியா சுசுகாமுசி என்ற ஒட்டுண்ணியல் உருவாகிறது.

iii) இது புதர் தாவரங்களை கொண்ட மண்ணில் நோய் தொற்றுகொண்ட பூச்சியின் லார்வா கடிப்பதால் பரவுகிறது.

iv) இந்நோய் ‘Bush typhus’ எனவும் அறியப்படுகிறது.

v) மழைக்காலத்தில் பூச்சிகள் முட்டை இடுகையில் இந்நோயானது அதிகம் உருவாகிறது. பொறிப்பு காலம் (பூச்சி கடிப்பிற்கும் நோய் அறிகுறிக்கும் இடைப்பட்ட காலம்) 10 - 14 நாட்கள்.

## 19. போஷன் அபியான் (தேசிய ஊட்டச்சத்து திட்டம்) பற்றி எழுதுக?

i) போஷன் அபியான் 2018, மார்ச் 8-ம் தொடங்கப்பட்டது.

ii) வளர்ச்சி குறைவு, ஊட்டச்சத்து குறைபாடு, இரத்த சோகை மற்றும் குறைந்த எடையுடன் பிறக்கும் குழந்தைகளின் அளவினை குறைத்தல், மேலும் வளர் இளம் பெண்கள், கர்ப்பிணி பெண்கள் & பாலூட்டும் தாய்மார்கள் மீது கவனம் செலுத்துதல், இதனால் ஒட்டு மொத்த ஊட்டச்சத்து குறைப்பாட்டை போக்குதல்.

iii) அனைத்து 36 மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்கள் மற்றும் 718 மாவட்டங்களும் 2020ஆண்டுக்குள் படிப்படியாக இத்திட்டத்துக்குள் கொண்டு வரப்படுவதை ஒட்டு மொத்தமாக உறுதி செய்யும் அணுகு முறை.

## 20. இ-சிகரெட் என்பவை யாவை?

i) இ-சிகரெட் என்பது மின்பேட்டரியால் இயங்கும் புகையிலை புகைப்பது போன்றது.

ii) இதில் நிகோடின் திரவத்தை கொதிக்க வைப்பதனால் கிடைக்கும் சாறானது பயன்படுத்தப்படுகிறது.

iii) நிகோடின் சாறு பலவகை நறுமணங்களில் மற்றும் பல மாறுபட்ட நிகோடின் அளவுகளில் வருகிறது.

iv) இ-சிகரெட் ஆதரவாளர்கள் பாரம்பரிய புகையிலையை விட இதில் நீராவி மற்றும் நிகோடினை மட்டும் சுவாசிப்பதால் அதிக உடல் நலப் பாதிப்பில்லை என வாதிடுகிறார்கள்.

**21. வர்த்தக வரவுகள் மின்னணு தள்ளுபடி அமைப்பு (TReDS) மற்றும் அதன் சிறப்பம்சங்களை குறிப்பிடுக?**

i) வர்த்தக வரவுகள் மின்னணு தள்ளுபடி அமைப்பானது சிறு/குறு தொழில் நிறுவனங்களின் பல நிதியாளர்களின் நிதி வர்த்தக வரவுகளை ஆன்லைன் மூலம் எளிதாக்க உதவும் மின்னணு நிறுவன அமைப்பு வழி முறையாகும்.

**வர்த்தக வரவுகள் நிதி தள்ளுபடி அமைப்பின் சிறப்பம்சங்கள்:**

a. விற்பனையாளர், வாங்குபவர்கள் மற்றும் நிதியாளர்கள் ஒருங்கிணைந்த தளம்.
b. காகித தாள்கள் (பேப்பர்) பயன்பாட்டை அகற்றுகிறது.
c. நிதியை எளிதாக பெற முடிகிறது.
d. ஆன்லைன் (மின்னணு) பரிவர்த்தனை
e. போட்டி தள்ளுபடி விலைகள்
f. இசைவான தரவு ஓட்டம்
g. தரப்படுத்தப்பட்ட நடைமுறைகள்

**22. பூஜ்ய பட்ஜெட் இயற்கை விவசாயம் என்றால் என்ன?**

i) பூஜ்ய பட்ஜெட் இயற்கை விவசாய முறையானது பயிர் வளர்த்தல் மற்றும் அறுவடைக்கான செலவு பூஜ்யமாக இருக்கும் முறை.

ii) இதன் பொருள் விவசாயிகள் உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகளை ஆரோக்கியமாக பயிர்வளர்ப்பிற்காக வாங்காமல் இருப்பதை உறுதி செய்வது.

iii) அடிப்படையில் இயற்கை வேளாண்மை தொழில்நுட்பம் என்பது உயிரி உரங்கள்/பூச்சி கொல்லிகளை வேதி உரங்கள்/பூச்சிக் கொல்லிகளுக்கு பதிலாக பயன்படுத்துவது.

iv) மண்புழுக்கள், பசு சாணம், கோமியம், தாவர இழைகள், மனித கழிவுகள் மற்றும் உயிரி உரங்களை பயிர் பாதுகாப்பிற்காக விவசாயிகள் பயன்படுத்துவது.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

v) விவசாயிகள் முதலீட்டை குறைத்தல்
vi) மண் வள சீரழிவிருந்து காத்தல்.

**23. ஏன் ப்ரூ (BRU) பழங்குடிகள் சமீபத்திய செய்திகளில் இடம் பெற்றுள்ளனர்?**

i) மத்திய உள்துறை அமைச்சகம் ப்ரூ பழங்குடியினரை திரிபுராவிலிருந்து மிசோரத்திற்கு மறு குடியமர்த்த நான்கு-முனை ஒப்பந்தத்தை ஒப்புக் கொண்டுள்ளது.
ii) இவர்கள் ரிகாங் எனவும் அறியப்படுகிறார்கள்.
iii) திரிபுரா, அசாம், மணிப்பூர் மற்றும் மிசோரத்தில் பரவிக் காணப்படுகின்றனர்.
iv) இவர்கள் பழமையான பழங்குடியினர் பிரிவு என வகைப்படுத்தப்பட்டுள்ளனர்.
v) திரிபுராவின் திரிபுரி பழங்குடியினருக்கு பிறகு இரண்டாவது பெரிய பழங்குடியினர்.
vi) நடனம் : மே - நவுமா.

**24. ஜல் மார்க் விகாஸ் (நீர் வழி மேம்பாட்டு திட்டம்) பற்றி எழுதுக.**

நீர் வழி மேம்பாட்டு திட்டமானது கங்கை ஆற்றின் ஹால்தியா - வாரணாசி வரை 1,500 - 2000 டன் கொள்ளவு கொண்ட கப்பல்களின் பயணத்தை எளிதாக்க முயல்கிறது.

நீர்வழி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் முக்கிய பணிகள்:

a. உகந்த வழியை மேம்படுத்துதல்.
b. பல - மாதிரி முனையங்கள்
c. நதி போக்குவரத்து அமைப்பை வழி நடத்துதல்
d. பாதுகாப்பு பணிகள்
e. நவீன ஆறு பற்றிய தகவல் அமைப்பு (RIS)
f. டிஜிட்டல் புவி இடங்காட்டி அமைப்பு (டிஜிபிஎஸ்)
g. இரவு போக்குவரத்து வசதிகள்
h. நவின கால்வாய் குறியீடுதல் வசதி முறைகள்

**25. பிரதம மந்திரி கிரிஷி சின்சாயி திட்டத்தின் நோக்கங்களை குறிப்பிடுக?**

i) நீர்ப்பாசனத்தில் முதலீடுகளை ஒருங்கிணைத்தல்

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

ii) பாசனத்தை உறுதி செய்வதன் மூலம் பயிர் வளர்க்கும் பரப்பை விரிவுபடுத்துதல்.

iii) விவசாயத்தில் நீர் பாசன செயல்திறனை மேம்படுத்துதல்.

iv) வீணாகும் நீரின் அளவைக் குறைத்தல்.

v) நுட்பமான பாசன முறைக்கு ஊக்கப்படுத்துதல் மற்றும் பிற

vi) நீர் சேமிக்கும் தொழில்நுட்பங்கள் (ஒரு சொட்டுக்கு அதிக பயிர்கள்)

**26. பாலிஸ்டிக் ஏவுகணை இடைமறி மேம்பட பாதுகாப்பு (AAD) பற்றி சுருக்கமாக எழுதுக.**

i) உள் - வளி மண்டல ஏவுகணை

ii) 15 - 25 கி.மீ. உயரத்திலிருந்து வரும் இலக்குகளை இடைமறிக்கும் திறன்.

iii) 7.5 மீட்டர் உயரம் மற்றும் சுமார் 1.2 டன்கள் எடை கொண்டது.

iv) இது ஒரு நிலை மட்டுமே கொண்ட திட எரிபொருளால் இயங்கும் மேம்பட்ட ஏவுகணை.

v) இராணுவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பால் (DRDO) உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்டது.

**27. ஏரோஜெல் என்பதன் பொருள் என்ன?**

i) விஞ்ஞானிகள் மதுபான கழிவை பயன்படுத்தி ஒளி ஊடுருவும் பசை போன்ற வெப்பத்தடை பொருளை உருவாக்கியுள்ளனர். இது ஏரோஜெல் என்றழைக்கப்படுகிறது.

ii) இது தட்டையான நெகிழி தொடு வில்லை (Contact lens) போன்று இருக்கும்.

iii) இது வெப்பத்தடை அதிகம் உடைய ஒளி ஊடுருவும் தன்மை கொண்ட ஜெல்.

iv) இதன் மெல்லிய சுருள் குறுக்கு வடிவ திடபொருளால் உருவானது. இதன் உள்ளே காணப்படும் சிறு துளைகள் காற்றை பிடித்திருக்கும். இதன் பிடித்து வைத்திருக்கும் திறனால் நல்ல கடத்தாப் பொருளாக செயல்படுகிறது.

**28. மைக்ரோகிரிஸ்டலைட்டுகள் (Micro Cystallites) பற்றி சிறு குறிப்பு வரைக.**

i) சிக்கலான கரிம தங்கம் மற்றும் பிற அயனிகளை கட்டுபடுத்தப்பட்ட நிலையில் சிதைத்து உருவாக்கப்படுகிறது.

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

ii) சாதாரண தங்கம் கனசதுர முகமானது கட்டமைப்பை கொண்டிருக்கிறது. அதே நேரத்தில் புதிய சிதைந்த வடிவமானது கன வடிவமைப்பு : நான்முக மற்றும் எண்முக வடிவம் கொண்டது.

iii) மைக்ரோகிரிஸ்டல் தங்கம் ஆனது தங்கத்தை விட உயர்ந்ததாக கருதப்படுகிறது.

iv) பாதரசம் மற்றும் இராஜ திரவத்தால் (அக்வா ரெஜியா) கரையாது.

v) இவை தங்கத்தை விட அதிக நிலையானவை.

## 29. ஹெலினா என்றால் என்ன?

i) உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட ஹெலிகாப்டரால் ஏவப்படும் பீரங்கி எதிர்ப்பு வழிகாட்டு ஏவுகணை.

ii) அகசிவப்பு பிம்ப தேடுதலினால் வழி நடத்தப்படுகிறது.

iii) ஏவும் நிலையின் முன்பு பூட்டு முறையில் இயங்குகிறது.

iv) உலகின் மேம்படுத்தப்பட்ட பீரங்கி - எதிர்ப்பு ஏவுகணைகளில் ஒன்று.

## 30. சர்வதேச பவுத்த சம்மேளனத்தின் முக்கியத்துவம் மற்றும் கருத்துருவை எழுதுக?

i) முக்கியமான புத்த சமய பாரம்பரிய மற்றும் புனித தளங்களை ஊக்குவித்தல்.

ii) முன்னர் பயணித்த பயணிகளின் அனுபவங்களை (முன்னெடுத்து செல்லல்) அறிந்து கொள்ளல்.

iii) கருத்துரு : "புத்தரின் பாதை - வாழும் பாரம்பரியம்".

## 31. இந்தியாவில் பதிலி வாக்குப்பதிவின் முக்கியத்துவம் என்ன?

i) பதிலி வாக்குபதிவின் படி ஒரு பதிவு செய்த வாக்காளர் அவரது பிரதிநிதி மூலம் வாக்களிக்க முடியும்.

ii) இது 2013 மக்களவைத் தேர்தல் மற்றும் சட்டமன்ற தேர்தல்களில் அறிமுகப்படுத்தப்பட்டது.

iii) ஆயுதப்படை வீரர்கள், எல்லைபாதுகாப்பு படை, சிஆர்பிஎப், சிஐஎஸ்எப் பொது பொறியியல் பாதுகாப்பு படை மற்றும் எல்லை பாதை அமைப்பினர் போன்ற "வரையறுக்கப்பட்ட வாக்காளர் சேவையினர்" அவர்கள் வருகை தராத காரணத்தால் அவர்களுக்கு பதிலாக அவர்களது பிரதிநிதிகள் பதிலி வாக்களிக்க அனுமதிக்கப்படுகிறது.

iv) ஒரு வரையறுக்கப்பட்ட வாக்காளர் சேவை அஞ்சலில் வாக்களிக்க முடியும்.

**32. ஹைட்ரோகார்பன் தொலைநோக்கு பார்வை - 2025 பற்றி சுருக்கமாக எழுதுக.**

i) 2000-ஆம் ஆண்டு வகுக்கப்பட்ட கொள்கை இது. அடுத்து வரும் 25 ஆண்டுகளுக்கு ஹைட்ரோகார்பன் துறையை வழி நடத்தும், கொள்கைகளையும் கட்டமைத்துள்ளது.

ii) தன்னிறைவை அடைய உள்நாட்டு உற்பத்தி அதிகரிப்பு மற்றும் வெளிநாட்டு எண்ணெய் பங்குகளில் முதலீடு செய்வதன் மூலம் எரிசக்தி பாதுகாப்பை உறுதி செய்தல்.

iii) தூய்மையான மற்றும் பசுமையான இந்தியாவை உறுதிப்படுத்துவதற்கான தயாரிப்பு தரத்தை மேம்படுத்துவதன் மூலம் வாழ்க்கை தரத்தை உயர்த்துதல்.

iv) ஒரு சுதந்திர சந்தை மற்றும் நிறுவனங்களுக்கு மத்தியில் ஆரோக்கியமான போட்டியை ஊக்குவித்தல் மற்றும் வாடிக்கையாளர் சேவையை மேம்படுத்துதல்.

v) நாட்டின் மூலோபாய மற்றும் பாதுகாப்பு திட்டங்களைக் கருத்தில் கொண்டு எண்ணெய் பாதுகாப்பை உறுதி செய்தல்.

**33. பிரதமரின் கனிமத்துறை நலத்திட்டத்தின் (பிரதம மந்திரி கான்ஜி சேஸ்த்ரா கல்யாண் திட்டம்) நோக்கங்கள் குறித்து எழுதுக.**

i) சுரங்கங்களால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பல்வேறு நலத்திட்டங்களை அமல்படுத்தல்.

ii) இந்த திட்டங்கள், மாநில மற்றும் மத்திய அரசில் தற்போது இருக்கும் திட்டங்கள் மூலம் பூர்த்தி செய்யப்படும்.

iii) சுரங்கங்கள் உள்ள மாவட்டங்களில் உள்ள மக்களின் சுற்றுச்சூழல், சுகாதாரம் மற்றும் சமூக-பொருளாதாரம் ஆகியவற்றில் ஏற்படும் பாதிப்புகளின் தாக்கங்களை குறைத்தல்.

iv) சுரங்கங்களால் நீண்ட கால அடிப்படையில் நீடித்த வாழ்வாதாரத்தை பாதிக்கப்பட்ட மக்களுக்கு உறுதி செய்தல்.

**34. சிலிகா ஏரி அண்மைச் செய்திகளில் இடம் பெற்றதன் காரணம் என்ன?**

i) சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகமானது தண்ணீரில் இயங்கும் வானூர்திகளை ஏரியில் அமைப்பதற்கான முன்மொழிவிற்கு அனுமதி வழங்கியது.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

ii) ஆசியாவின் மிகப்பெரிய உப்பு நீர் காயலான இது ஒடிசா கடற்கரையில் அமைந்துள்ளது.

iii) இது வங்காளவிரிகுடாவை 60 கி.மீ. குறுகிய சதுப்பு நிலங்களாலும் மற்றும் மணல் திட்டுகளாலும் பிரிக்கப்படுகிறது.

iv) 1981-ஆம் ஆண்டில் இராம்சார் தளமாக அறிவிக்கப்பட்டது.

**35. பராக் 8 ஏவுகணை பற்றி சுருக்கமாக எழுதுக.**

i) இந்தியா மற்றும் இஸ்ரேலால் இணைந்து வடிவமைக்கப்பட்டது.

ii) நீண்ட தூர நிலத்திலிருந்து விண்ணை நோக்கிப் பாயும் ஏவுகணை

iii) எந்த வகையான வான்வழி அச்சுறுத்தலையும் (விமானங்கள், ஹெலிகாப்டர், கப்பல் எதிர் ஏவுகணைகள் மற்றும் ஆளில்லாத வான் வழி வாகனம். குரூஸ் ஏவுகணை மற்றும் போர் விமானங்கள் உள்ளிட்டவற்றையும் எதிர்கொள்ளும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

iv) 500 மீ தூரத்திலிருந்து வரும் ஏவுகணைகளை சுட்டு வீழ்த்தும் திறன் படைத்தது.

v) அதிகபட்ச வேகம் : 2 மேக்

vi) செயல்பாட்டு எல்லை : 70 - 100 கி.மீ.

**36. REDD+ வரையறு.**

i) REDD+ பொருள் - காடுகள் அழித்தல் மற்றும் அதன் மூலம் வெளிப்படும் உமிழ்வுகளை குறைத்தல்

ii) வனங்களில் கார்பன் இருப்பை பாதுகாத்தல், நீடித்த வன மேலாண்மை மற்றும் வளரும் நாடுகளில் கார்பன் உறிஞ்சப்படும் அளவை உயர்த்துதல்.

iii) வன பாதுகாப்பிற்கு ஊக்கத் தொகை தருவதன் மூலம் பருவ நிலை மாற்றத்தை குறைத்தல்.

iv) பருவநிலை மாற்றத்தை குறைக்க கார்பன் மட்டுபடுத்தல் சேவைகளான இந்திய காடுகளின் கார்பன் உறிஞ்சும் அளவை அதிகரித்தல் போன்ற சாதகமான பங்களிப்பை இந்திய வனத்துறையால் உருவாக்க முடியும்.

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

**37. பெட்கோக் பற்றி குறிப்பு எழுதுக.**

i) பெட்ரோலியம் கோக் (அ) பெட்கோக் என்பது திட கார்பனை அதிகம் (90% கார்பன் & 3 - 6% சல்பர்) கொண்ட எண்ணெய் சுத்திகரிப்பு பொருளாகும்.

ii) இது கீழ்மட்ட எரிபொருள் எனவும் வரையறுக்கப்பட்டுள்ளது.

iii) நிலக்கரியை விட 11% அதிகமான பசுமை இல்ல வாயுக்கள் மற்றும் சுமார் 17 மடங்கு நிலக்கரியை விட அதிக கந்தகத்தை வெளியிடுகிறது.

iv) நுண்ணிய துகள் மாசுக்களின் மூலம் பெட்கோக் நுரையீரலில் தங்கக் கூடியது.

v) இது வனடியம் என்ற ஒரு நச்சு உலோகத்தை கொண்டிருக்கலாம்.

vi) சல்பர் அதிகம் கொண்ட பெட்கோக் மற்றும் பிற மாசுபட்ட எரிபொருட்கள் சிமெண்ட் தொழிற்சாலைகள், சாயத் தொழிற்சாலை, காகிதத் தொழிற்சாலைகள், செங்கற்சூளை மற்றும் செராமிக் தொழிற்சாலையில் பெருமளவில் பயன்படுத்தப்படுகின்றன.

vii) இந்தியா உலகின் மிகப்பெரிய பெட்கோக் நுகர்வு நாடாகும்.

**38. "CALL FOR CODE" முன்னெடுப்பினைத் தொடங்கிய நிறுவனம் எது? அதன் நோக்கத்தை எழுதுக.**

i) "அழைப்பிற்கான குறியீடு" (Call for Code) ஐபிஎம் நிறுவனத்தால் தொடங்கப்பட்டது.

ii) ஸ்டார்ட் அப், கல்வியாளர்கள் மற்றும் தொழில் மேம்பாட்டாளர்கள் இணைந்த இயற்கை பேரிடர்களை எதிர்கொள்ளல் மற்றும் மீட்புக்கான முன்னெடுப்பு.

iii) ஒரு முக்கியமான சமுதாயப் பிரச்சனைகளை தடுத்தல், எதிர் கொள்ளல் மற்றும் இயற்கை பேரிடர்களிலிருந்து மீட்டெடுத்தல் மூலம் தீர்வு காணுதல்.

iv) மேகத் தரவு, செயற்கை நுண்ணறிவு மற்றும் பிளாக் செயின் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துதல் அதனுடன் பயிற்சி மற்றும் அது தொடர்பான குறியீடுகளை வழங்குதல்.

**39. பாணினி (Panini) மொழி ஆய்வகம்.**

**i) யாரால் மற்றும் எங்கு அமைக்கப்பட்டுள்ளது?**

a. மொரிஷியலிலுள்ள மகாத்மா காந்தி நிறுவனத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

ii) **என்ன நோக்கத்துடன் ஆய்வகம் அமைக்கப்பட்டுள்ளது?**

a. இளம் தலைமுறையினரிடையே இந்தி மொழியை படிக்க மற்றும் பேசுவதை ஊக்குவிக்க மற்றும் அதனை மேம்படுத்த.

b. இது இளைஞர்களிடையே ஹிந்தி மொழியை கற்றுக் கொள்வதில் அதிக ஆர்வத்தை ஏற்படுத்துவதன் மூலம் அதனால் மொழி வலுவடையவும் உதவுகிறது.

**40. அழிந்து போகக் கூடிய நிலையிலிக்கும் உயிரினங்களின் பாதுகாப்புக்கான ஆய்வகம் (LaCONES) பற்றி குறிப்பு வரைக?**

i) வன உயிரினங்கள் மற்றும் அதன் வளங்களை பாதுகாப்பதற்காக செயல்படும் ஒரே ஆராய்ச்சி நிலையமாகும்.

ii) இது 1998-ல் இந்தியாவின் விலங்கியல் ஆணையம், சிஎஸ்ஐஆர் (மத்திய அறிவியல் மற்றும் தொழிலக ஆய்வு மன்றம்) மற்றும் ஆந்திரா அரசு உதவியுடன் அமைக்கப்பட்டுள்ளது.

iii) இது நேரு உயிரியல் பூங்காவின் இனப்பெருக்க மையத்தின் உதவியுடன் சருகுமானை பாதுகாக்க உதவியது. மேலும் சருகுமான் எண்ணிக்கையை தெலுங்கானா காடுகளில் அதிகரிக்க உதவியது.

iv) உதாரணமாக, அம்ரபாத் காட்டிலிருந்து காணாமல் போன சருகுமான்கள் (Mouse deer) - லாகான்ஸ் அமைப்பின் முயற்சிகளின் மூலம் அவை மீண்டும் அம்ரபாத் புலிகள் சரணாலயத்தில் மீண்டும் தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

v) முன்னதாக, லாகான்ஸ் வன உயிரினங்களை அதன் எச்சங்கள் மற்றும் பாகங்கள் மூலம் அடையாளம் காண உலகளாவிய டி.என்.ஏ. சார்ந்த குறியீட்டை உருவாக்கியுள்ளது.

vi) இது 250க்கும் மேற்பட்ட பாலூட்டி உயிரினங்கள், பறவைகள் மற்றும் ஊர்வனவற்றின் டி.என்.ஏ. வங்கி ஆகும்.

**41. சின்னப்பிள்ளை பெருமாள் என்பவர் யார்? அவரின் சமூக பங்களிப்பை பற்றி எழுதுக.**

i) திருமதி.சின்னப்பிள்ளை பெருமாள் 2018-ம் ஆண்டில் அவ்வையார் விருது பெற்றவர்.

ii) இவர் கடந்த முப்பதாண்டுகளாக ஊரக பெண்களின் உயர்வுக்காக பாடுபடுபவர்.

iii) பெண்களுக்கான களஞ்சியம் என்னும் சுய உதவிக் குழுவை நெடுங்காலமாக வழி நடத்துபவர்.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

iv) இவர் பெண்கள் பயன் பெற 2,589 சுய உதவிகுழுக்கள் உருவாக பொறுப்பானவராக இருந்தார்.

v) இவர் இலவச மருத்துவ முகாம்கள், காய்கறிகளை இயற்கை விவசாய மூலம் வளர்த்தல், மரம் நடுதல் போன்றவற்றை நடத்த தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர் ஆவார்.

**42. தேசிய நிறுவன தர கட்டமைப்பு (NIRF) தரவரிசைப்படுத்தல் என்றால் என்ன?**

i) இது தேசிய நிறுவனங்களுக்கான தர கட்டமைப்பு

ii) இது இந்தியாவின் மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தால் மேற்கொள்ளப்பட்ட முறையாகும்.

iii) இந்தியாவில் உயர்கல்வி நிறுவனங்களின் தரவரிசை

iv) IIT - மதராஸ் முதலிடத்தையும் அண்ணா பல்கலைக்கழகம் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளன.

**43. "ஆரோக்கியமான மாநிலம்"; "முற்போக்கு இந்தியா" - அறிக்கை பற்றியும் இந்தியாவில் 5 ஒட்டுமொத்த செயல்திறனில் உள்ள முதல் ஐந்து மாநிலங்கள் பற்றியும் சிறுகுறிப்பு வரைக.**

i) இந்த அறிக்கையானது ஆண்டாண்டாக மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் ஆரோக்கியம் சார்ந்த புதுமையான முயற்சிகளின் அடிப்படையில் அவற்றைப் பட்டியலிடுகிறது.

ii) நிதி ஆயோக் - இந்த அறிக்கையை வெளியிடுகிறது.

iii) முதல் 5, இடங்களிலுள்ள மாநிலங்கள்

1. கேரளா, பஞ்சாப் & தமிழ்நாடு
2. ஜார்க்கண்ட்
3. ஜம்மு & காஷ்மீர்
4. உத்தர பிரதேசம்

**44. ஜோஸிலா சுரங்கப்பாதை பற்றி குறிப்பு எழுதுக.**

i) அனைத்து காலநிலையிலும் ஸ்ரீநகர், கார்கில் மற்றும் லே இடையேயான இணைப்பினை இந்த சுரங்கப் பாதையானது வழங்கும்.

ii) இந்தியாவின் மிக நீண்ட சாலை வழி சுரங்கப்பாதை மற்றும் ஆசியாவின் மிக நீண்ட இருவழி சுரங்கப்பாதை.

iii) சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலை அமைச்சகம்.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

iv) 14.150 கி.மீ. நீளமுள்ள இருவழி பாதை, 14.200 கி.மீ. நீளமுள்ள சுரங்கப்பாதை, தேசிய நெடுஞ்சாலை NH - 1 A பிரிவு பால்தால் மற்றும் மினமாக்கிற்கு இடையே ஜம்மு-காஷ்மீர் மாநிலத்திலமைந்துள்ளது.

**45. சுற்றுச்சூழல் அறநெறிகளை எவ்வாறு பராமரிக்க வேண்டும்?**

a) இயற்கை வளங்களை சமமாக பயன்படுத்துதல்

b) ஊரக மற்றும் நகர்ப்புற பகுதி மக்களிடையே சமத்துவத்தை ஏற்படுத்துதல்

c) எதிர்கால தலைமுறைகளுக்கு வளங்களைப் பாதுகாத்தல்

d) விலங்குகளின் சுற்றுச் சூழல் உரிமைகள்

e) சுற்று சூழலுக்கு ஏற்ற (Eco-Friendly) பொருட்களை பயன்படுத்துதல்

f) சுற்றுச்சூழலை சுத்தமாக வைத்திருத்தல்

g) சூழல் பாதுகாப்பில் சமுதாய பங்களிப்பை இடம்பெறச் செய்தல்.

## *8 மதிப்பெண் வினாக்கள்*

**1. டிஜிட்டல் வடகிழக்கு விஷன் - 2022ன் குறிக்கோள்களை எழுதுக.**

a) வடகிழக்கு பகுதியில் அதிவேக அகன்ற வரிசை கற்றை (Broad band) (ப்ராண்ட்பேண்ட்) சேவை, செல்பேசி வசதிகள் ஆகியவைகளை அனைத்து கிராமங்களுக்கும் வழங்குதல்.

b) வடகிழக்கு பகுதிக்காக கவுகாத்தியில் பேரிடர் மீட்பு மையத்துடன் கூடிய மேகக் கனிமை கேந்திரத்தினை (Clud hub) உருவாக்குதல்.

c) பொது சேவை மையங்களை அனைத்து வடகிழக்கு மாநிலங்களிலும் உள்ள கிராம பஞ்சாயத்துகளுக்கு விரிவுபடுத்துதல்.

d) தரமான சுகாதார, கல்வி மற்றும் விவசாய சேவைகளினை டிஜிட்டல் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி சிறப்பாக வழங்கச் செய்தல்.

e) உள்ளூர் சுற்றுலா, கலை மற்றும் கலாச்சாரம், கைவினை, கைத்தறியை மேம்படுத்துதல்.

f) வடகிழக்கு பகுதிக்காக ஸ்டார்ட் அப் மற்றும் புத்தாக்க மையங்களை நிறுவுதல்.

g) டிஜிட்டல் வடகிழக்கு திட்டத்திற்காக பாதுகாப்பு ஆய்வகங்கள் அமைப்பது மற்றும் சிறப்பு பயிற்சி திறன் அளிப்பதன் மூலமாக பாதுகாப்பான இணையவெளியை வழங்க இயலும்.

h) தொலைநோக்கு ஆவணங்களின் மூலம் அடையாளம் காணப்பட்டுள்ள 8 பகுதிகள் மூலம் வடகிழக்கு மக்களுக்கு அதிகாரம் வழங்குதல்.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

i) டிஜிட்டல் உள்கட்டமைப்பு, டிஜிட்டல் சேவைகள், டிஜிட்டல் அதிகாரமளித்தல், மின்னணு பொருட்கள் உற்பத்தியினை ஊக்குவித்தல், தகவல் தொழில் நுட்பம், வணிக செயல் அயலாக்கம் (BPO), தகவல் தொழில்நுட்ப சேவைகள் உள்ளிட்டவற்றை ஊக்குவித்தல்,

j) டிஜிட்டல் பணம் செலுத்துதல், டிஜிட்டல் புத்தாக்கம் மற்றும் ஸ்டார்ட்-அப் மற்றும் சைபர் பாதுகாப்பை ஊக்குவித்தல்.

**2. மின்சாரத்திற்கான மேல் முறையீட்டு தீர்ப்பாயம் - விளக்குக.**

a) சட்டரீதியான அமைப்பு

b) ஒழுங்குமுறை ஆணைக்குழு மற்றும் ஆணைக்குழு அலுவலரின் ஆணைக்கு எதிராக தொடுக்கப்படும் வழக்கை விசாரிக்கும் நோக்கில் அமைக்கப்பட்டது.

c) மின்சார சட்டம், 2003 பிரிவு 110-ன் கீழ் உருவாக்கப்பட்டது.

d) மின்வாரியத்திற்கான மேல்முறையீட்டு தீர்ப்பாயம் ஆனது இந்தியா முழுவதும் தன் நீதி பரிபாலன எல்லையை கொண்டுள்ளது. மத்திய ஒழுங்குமுறை ஆணையம் (அ) மாநில ஒழுங்குமுறை ஆணையம் (அ) கூட்டு ஆணையத்தின் உத்தரவின் பேரில் தீர்ப்பாயம் ஆனது மேல் முறையீட்டு மனுக்களை விசாரிக்க அமைக்கப்பட்டது.

e) இத்தீர்ப்பாயம் ஆனது முழுமையான நீதி பரிபாலன எல்லையை கொண்டமைக்கப்பட்டது ஆகும்.

f) சட்டத்தின் 121-ஆம் பிரிவின் கீழ் மனுக்களை விசாரிக்கும்.

g) அனைத்து ஆணையங்களும் தன்னிச்சையாக செயல்படுவதற்கான பாதையினை வகுக்கிறது.

**கட்டமைப்பு:**

a) தலைவர் மற்றும் 3 உறுப்பினர்கள்

b) புதிய தலைவர் : நீதிபதி மஞ்சுளா செல்லூர்.

c) தலைவரால் நியமிக்கப்பட்ட ஒவ்வொரு அமர்விலும் குறைந்தபட்சம் ஒரு நீதிபதி மற்றும் ஒரு தொழில்நுட்ப உறுப்பினர் இருக்க வேண்டும்.

**3. நவ்லேகா திட்டம் பற்றி விவாதி.**

**நோக்கம் :**

1) கூகுள் அறிமுகப்படுத்தியுள்ள திட்டம்.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

2) இணையத்திலுள்ள தகவல்கள் அதிக இந்திய பயணாளர்களை சென்றடையும் வகையில் குறிப்பாக வட்டார மொழிகளில் உருவாக்கப்பட உள்ளது.

**நவ்லேகா திட்டம்**

1) நவ்லேகாவின் சமஸ்கிருத பொருள் "புதிய வழியில் எழுதுதல்" (a new way to write) என்பதாகும்.
2) இணைய வழங்கலை எளிமைப்படுத்துவதன் மூலமாக 1,35,000 வட்டாரமொழி பதிப்பாளர்கள் இத்திட்டத்தினுள் அடங்குவர்.
3) இது செயற்கை நுண்ணறிவு கருவியை கொண்டுள்ளது. இதன் மூலம் பதிப்பகத்தார்கள் ஆவணங்களை எளிதாக நகலெடுக்க முடியும்.
4) இத்திட்டமானது இணையப் பக்கமில்லாத 90% உள்ளூர் மொழி செய்திதாள்களின் உள்ளடக்க நிறுவனங்களுக்கு ஆன்லைனில் பதிப்பிப்பதற்கான கருவிகளை வழங்குகிறது.
5) நவ்லோகாவில் பதிவு செய்த பதிப்பகத்தார்களுக்கு, இலவச இணையப் பக்கம் மற்றும் இணைய எல்லைகளை மூன்றாண்டுகளுக்கு வழங்குகிறது.
6) பதிப்பகத்தார்களின் இணைய பக்கங்களை விளம்பரப்படுத்த முதல் மூன்றாண்டுகளுக்கு கூகுள் ஆனது ஆதரவும் பயிற்சியும் வழங்குகிறது.

**முக்கியத்துவம்:**

1) இந்திய மொழிகளுக்குக் கிடைப்பது இணையத்தில் கிடைக்கும் தகவல்கள் ஆங்கிலத்தில் கிடைப்பதைப் போல் 1% மட்டுமே
2) உலகின் இரண்டாவது மிகப்பெரிய இணைய பயனாளர்கள் சந்தையாக இந்தியா திகழ்கின்றது. கூகுளின் முக்கிய சந்தையாக இந்தியா உள்ளது.
3) எனவே, இந்தப் புதிய திட்டத்தின் மூலம் உள்ளூர் மொழிகளில் இந்தியர்களுக்கு கிடைக்கும் வளங்களின் அளவு அதிகரிக்கும்.

## 4. தாழ்த்தப்பட்டோர்/பழங்குடியினர் சட்டம் பற்றி எழுதுக. ஏன் சமீபத்திய செய்திகளில் இடம் பெற்றிருந்தது?

**தாழ்த்தப்பட்டோர் / பழங்குடியினர் சட்டம் (SC / ST Act):**

1. தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு சட்டம்) பொதுவாக வன்கொடுமை தடுப்பு சட்டம் (அ) சுருக்கமாக வன்கொடுமை சட்டம் என அறியப்படுகின்றது.

2. தாழ்த்தப்பட்டோர் / பழங்குடியினர் சட்டம் 1989 செப்டம்பர், 9ல் இயற்றப்பட்டது.
3. 1995-ஆம் ஆண்டு மார்ச்-31-ஆம் தேதி சட்டத்திற்கான விதிகள் அறிவிக்கப்பட்டன.
4. தாழ்த்தப்பட்டோர் / பட்டியல் இனத்தவர்களின் சுய மரியாதையை உடைக்கின்ற பல்வேறு முறைகள் (அ) நடத்தைகள் தொடர்பான 22 குற்றங்களை இது பட்டியலிடுகிறது.
5. இதில் பொருளாதாரம், ஜனநாயகம் மற்றும் சமூக உரிமைகள் மறுக்கப்படுதல், பாகுபாடு, சுரண்டல் மற்றும சட்ட நடைமுறைகளை தவறாக பயன்படுத்துதல் ஆகியவை உள்ளடங்கும்.
6. SC/ST-சட்டம் குறிப்பிட்ட சில பகுதிகளை பயன்படுத்த மறுத்தல், சில பழக்கவழக்கங்களை கடைபிடிப்பதற்கு மறுத்தல் போன்றவற்றிலிருந்து பாதுகாப்பை வழங்குகிறது. தனிநபர் வன்கொடுமைகளான சாப்பிடக் கூடாதவற்றை சாப்பிட வைத்தல், மற்றும் பாலியல் சுரண்டல் ஏற்படுத்தல், வன்கொடுமையால் சொத்துகளுக்கு பாதிப்புறச் செய்தல், தவறான வழக்கு பதிவு, அரசியல் இயலாமை மற்றும் பொருளாதார சுரண்டலிலிருந்து தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினரை பாதுகாக்கிறது.
7. SC/ST சட்டத்தின் பிரிவு 14ன் படி, விரைவான விசாரணைக்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்படும்.
8. SC / ST - சட்டத்தின் முக்கிய நோக்கம் விளிம்பு நிலை மக்களுக்கு செயல் நடவடிக்கை மூலம் நிதியை வழங்குதல் அவர்களுக்கு கௌரவம், சுயமரியாதை மற்றும் பயம் மற்றும் வன்முறை (அ) அடக்குமுறை இல்லா வாழ்க்கையை ஆதிக்க சாதியிடமிருந்து வராமல் பாதுகாப்பான வாழ்க்கையை அளிப்பதாகும்.
9. சமீபத்திய திருத்த மசோதா, அசல் சட்டத்தின் பிரிவு 18-ல் மூன்று புதிய பிரிவுகளை சேர்த்துள்ளது.
   a) ஒரு நபரின் முதற்கட்ட விசாரணைக்கு முதல் தகவல் அறிக்கை (FIR) தேவையில்லை.
   b) இச்சட்டத்தின் கீழ் குற்றம் சாட்டப்பட்டவரின் கைதிற்கு எந்த அனுமதியும் தேவையில்லை.

**5. இராஜ்யசபா துணைத் தலைவரின் முக்கியத்துவம் மற்றும் தேர்தல், அதிகாரங்கள் ஆகியவற்றை பட்டியலிடுக.**

1) துணைத் தலைவர் பதவி ஒரு அரசியலமைப்பு சட்டப் பொறுப்பு, இது சட்டப்பிரிவு - 89ன் கீழ் உருவாக்கப்பட்டது.

2) இராஜ்ய சபாவின் துணைத் தலைவர் பதவி காலியாகும் போது அதன் உறுப்பினர்களில் ஒருவரை துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கலாம்.

3) இராஜினாமா செய்யும் போதோ (அ) பதவி நீக்கம் செய்யப்படும் போதோ (அ) இராஜ்ய சபாவின் பதவி காலம் முடியும் போதோ துணைத் தலைவர் பதவி காலியாகும்.

**தேர்தல்**

1) துணைத் தலைவர் தேர்தலுக்கான தேதியினை ராஜ்யசபாவின் தலைவர் முடிவு செய்வார். ராஜ்சபாவின் பொது செயலாளர் அனைத்து உறுப்பினர்களுக்கும் அதனை அனுப்பி வைப்பார்.

2) நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்கு முந்தைய மதியம் வரை எந்நேரத்திலும், எந்த உறுப்பினரும் சபையின் துணைத் தலைவராக வேறொரு உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற தீர்மானத்தை பொதுச் செயலருக்கு எழுத்து மூலம் (கடிதம்) அனுப்பலாம். ஒரு உறுப்பினர் ஒருவருக்கு மட்டுமே ஆதரவு (தீர்மானம் அறிக்கை) தர முடியும். இரண்டாவதாக தர முடியாது.

3) தீர்மானங்களை சரியாக வழிமொழிபவர்களால் ஒன்றன் மீது ஒன்றாக ஆணைகள் நிறைவேற்றப்படும். தேவை ஏற்படின் ஒன்றுக்கு மேற்பட்ட பிரிவுகளுக்கு கொண்டு செல்லப்படும்.

4) எந்தவொரு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டாலும் பிந்தைய தீர்மானங்களைத் தவிர்த்து, தீர்மானத்தை முன்மொழிந்த உறுப்பினரே துணைத் தலைவராக தேர்வு செய்யப்பட்டார் என அறிவிக்கப்படும்.

**அதிகாரங்கள்**

1) அரசியலமைப்பின் படி துணைத் தலைவர் (அ) மற்ற உறுப்பினர்கள் அவையின் அமர்விற்கு தலைமை தாங்க முடியும்.

2) தலைமை தாங்கும் போது தலைவர் கொண்டிருக்கும் அனைத்து அதிகாரங்களையும் பெறுகிறார்.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

**முக்கியத்துவம்**

1) இது ஒரு முக்கியமான பொறுப்பாகும். தலைவர் / குடியரசுத் தலைவர் இல்லாத சமயத்தில், அவை சுமூகமாக நடப்பதனை உறுதி செய்வதில் முக்கிய பங்கு கொள்கிறார்.

2) புதிய இராஜ்ய சபாவின் துணைத் தலைவராக ஹரிவன்ஸ் நாராயண் சிங் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

**6. தேசிய உயர்கல்வி திட்டம் (இராஷ்ட்ரிய உச்சாதர் சிக்ஷா அபியான்) பற்றி எழுதுக.**

1) தேர்தல் உயர்கல்வி திட்டம் ஒரு மத்திய அரசு நிதியுதவியளிக்கும் திட்டம். 2013-ல் அறிமுகப்படுத்தப்பட்டது.

2) தகுதி வாய்ந்த மாநில கல்வி நிறுவனங்களுக்கு உத்தியுடன் கூடிய நிதி வழங்குவதை நோக்கமாக கொண்டது.

3) பொதுப்பிரிவு மாநிலங்களுக்கு 60 : 40 விகிதத்திலும், சிறப்பு அந்தஸ்து மாநிலங்களுக்கு 90 : 10 மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு மத்திய நிதி விதிமுறையின் அடிப்படையில் முடிவு சார்ந்து நிதி வழங்கப்படும்.

4) நிதியானது மத்திய அமைச்சகம் மூலமாக கல்வி நிறுவனங்களுக்குத் தேவைப்படும் மாநில அரசுகள் / யூனியன் பிரதேசங்கள் வழியே மாநில உயர்கல்வி கவுன்சிலுக்கு வழங்கப்படும்.

**நோக்கங்கள்**

a) பரிந்துரைக்கப்பட்ட விதிமுறைகளுக்கும், தரநிலைகளுக்கும் இணங்குவதன் மூலம் கல்வி நிறுவனங்களின் ஒட்டுமொத்த தரத்தை மேம்படுத்துதல் மற்றும் தர உறுதி கட்டமைப்பை கட்டாயமாக்குதல்.

b) கல்வி நிறுவனங்களின் அமைப்பு மாற்றம் மற்றும் திட்டமிடல் மற்றும் கண்காணித்தல், தன்னாட்சி அதிகாரம் ஆகியவைகளை மாநில பல்கலைக்கழகங்களுக்கு வழங்குதல் மற்றும் ஆளுகை மேம்படுத்தல்.

c) இணைப்பு, கல்வி மற்றும் தேர்வு முறைகளில் சீர்திருத்தங்களை உறுதிப்படுத்துதல்.

d) அனைத்து உயர்கல்வி நிறுவனங்களிலும் தரமான ஆசிரியர்கள் சரியான அளவில் கிடைக்க செய்தல் மற்றும் திறன் கட்டமைப்புகளை அனைத்து அளவிலும் உறுதிபடுத்துதல்.

e) ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகளுக்கு தங்களை அர்ப்பணிக்க தகுந்த சூழலை உயர்கல்வி நிறுவனங்களில் உருவாக்குதல்.

f) உயர் கல்வி கிடைத்தலில் உள்ள வட்டார ஏற்றத் தாழ்வுகளைப் போக்க கல்வி நிறுவனங்கள் நிறுவப்படாத பகுதிகளில் அந்நிறுவனங்களை அமைத்தல்.

g) உயர் கல்வியில் சமத்துவத்தை ஏற்படுத்துவதற்கு தாழ்த்தப்பட்ட / பழங்குடியினர் மற்றும் கல்வி ரீதியாக பின்தங்கிய வகுப்பினர்களுக்கு போதுமான வாய்ப்பினை வழங்குதல்.

h) பெண்கள், சிறுபான்மையினர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்ட அனைவருக்கும் உயர்கல்வி வழங்குதல்.

**7. பரிவேஷ் பற்றி விளக்குக.**

a) ஊடாடுதல், நல்லொழுக்கம் மற்றும் சுற்றுச்சூழலுக்கான ஒற்றைச் சாளர மையம் மூலமாக செயல் நடவடிக்கை மற்றும் பொறுப்பினை எளிதாக்குதல்.

b) இது ஒரு சுற்றுச்சூழல், காடு, வன உயிரி மற்றும் கடற்கரையோர ஒழுங்குப்படுத்தல் மண்டலத்திற்கான சுற்றுசூழல் ஒற்றை சாளர மையமாகும்.

c) இந்த ஒற்றை சாளர ஒருங்கிணைந்த சுற்றுச்சூழல் மேலாண்மை அமைப்பானது பிரதமரால் முன்னெடுக்கப்பட்ட "டிஜிட்டல் இந்தியா" திட்டத்தின் உந்துதலினால் மேம்படுத்தப்பட்டது.

**முக்கிய அம்சங்கள்**

a) பரிவேஷ் "பணிவாய்வு அடிப்படையிலான செயலி. இது வலைதள கட்டமைப்பு கருத்துருவினை அடிப்படையாக கொண்டது."

b) திட்டங்களை முன்மொழிபவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், ஆன்லைன் சமர்ப்பிப்பு மற்றும் நிர்வகித்தல் பணிகளை மத்திய சுற்றுச்சூழல், வன அமைச்சகம் மற்றும் மாநில சுற்றுசூழல் மதிப்பீட்டு ஆணையம் ஆகியவை ஆய்வு செய்யும்.

c) மத்திய, மாநில மற்றும் மாவட்ட ஆணையரிடமிருந்து பல்வேறு வகையான அனுமதி சான்றிதழ்களை வழங்குகிறது.

d) இந்த அமைப்பானது சுற்றுச்சூழல், வன மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம் மற்றும் தேசிய தகவல் மையத்தின் தொழில் நுட்ப ஆதரவுடன் வடிவமைக்கப்பட்டு மேம்படுத்தப்பட்டது ஆகும்.

e) ஒரு குறிப்பிட்ட திட்டத்திற்கு தேவையான எல்லா அனுமதிகளுக்கும் தனித்துவ அடையாளமும், ஒற்றை பதிவு மற்றும் ஒற்றை உள்நுழைவுகளை வழங்குகிறது. அனைத்து வகை அனுமதிகளையும், விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் ஒற்றை சாளரத்திற்குமான இடைமுகமாகும்.

**இதன் முக்கியத்துவம் மற்றும் பயன்கள்**

a) இது பொருளாதார வளர்ச்சிக்கு ஒரு கட்டமைப்பை வழங்குகிறது. மின் ஆளுமை மூலம் நீடித்த வளர்ச்சியை பலப்படுத்துகிறது.

b) பரிவேஷ் ஒட்டுமொத்த மதிப்பீட்டிற்கான அனைத்து செயல் திறன்களை மேம்படுத்துதலில் உதவுகிறது.

c) இது மத்திய, மாநில மற்றும் மாவட்ட அளவிலான அனுமதிகளுக்குரிய ஒற்றைச் சாளர அமைப்பின் மூலமான செயலாக்க ஆணையங்களுக்கு உதவுகிறது.

d) புவியியல் தகவல் அமைப்பு இடைமுக வசதி முன்மொழிவின் மூலம் செயல் திறன் மதிப்பீடு செய்யப்படுகிறது.

**8. தேசிய உயிரி எரிபொருள் கொள்கையின் முக்கிய அம்சங்களை விவாதிக்க.**

**a) வரைமுறைப்படுத்தல்**

1) முதல் தலைமுறை உயிரி எத்தனால், உயிரி டீசல் மற்றும் "மேம்பட்ட உயிரி எரிபொருள்".

2) இரண்டாம் தலைமுறை எத்தனால், நகராட்சி திட கழிவிலிருந்து பெறப்பட்ட எரிபொருள்.

3) மூன்றாம் தலைமுறை உயிரி எரிபொருள் உயிரி - அழுத்தப்பட்ட இயற்கை எரிவாயு.

4) ஒவ்வொரு பிரிவின் கீழ் தகுந்த நிதி மற்றும் ஊக்கத்தொகையை நிதி மூலம் நீட்டிக்க செய்தல்.

**b) மூலப் பொருட்களின் நோக்கம்**

1) இந்த கொள்கையானது எத்தனால் தயாரிப்பதற்கான மூலப் பொருளாக கரும்புச் சாறினை பயன்படுத்துவதற்கு வழிவகுக்கிறது.

2) சர்க்கரை கொண்டுள்ள பொருட்களான இனிப்பு பீட், இனிப்பு சோளம்.

3) ஸ்டார்ச் கொண்டுள்ள பொருட்களான சோளம், மரவள்ளி

4) சேதமடைந்த உணவு தானியங்கள், கோதுமை, உலர்ந்த அரிசி, மனித உபயோகத்துக்கு பயனற்ற அழுகிய உருளைக்கிழங்கு எத்தனால் தயாரிப்பதற்காக.

**c) விவசாயிகளுக்கு பாதுகாப்பு**

1) விவசாயிகள் உபரி உற்பத்திக் கட்டத்தின் போது தங்கள் உற்பத்திக்கான பொருத்தமான விலை கிடைக்காத நிலையில் உள்ளனர்.

2) உபரியை கணக்கில் கொள்வதன் மூலம், தேசிய உயிரி எரிபொருள் ஒருங்கிணைப்பு குழுவானது உபரி உணவு தானியங்கள் மூலம் தயாரிக்கப்பட்ட எத்தனாலை பெட்ரோலுடன் கலக்க அனுமதிக்கிறது.

**d) நிலைப்புத் திறன் இடைவெளி நிதி**

1) 6 ஆண்டுகளுக்கு ரூ.5000 கோடியை 2-ஆம் தலைமுறை எத்தனால் தயாரிக்கும் உயிரி சுத்திகரிப்பு நிறுவனங்களுக்கு. நிலைப்புத் திறன் நிதியாக வழங்குவதற்கான கொள்கையைக் குறிக்கிறது. '

2) கூடுதலாக அதிகவரி ஊக்கத் தொகை, முதல் தலைமுறை உயிரி எரிபொருளை வாங்குவதை ஒப்பிடும் போது அதிக வாங்கும் விலை.

**உயிரி எரிபொருள் உற்பத்தியை ஊக்குவித்தல்**

1) உண்ணத் தகாத எண்ணெய் வித்துக்கள், பயன்படுத்தப்பட்ட சமையல் எண்ணெய். குறுகிய கால பயிர்கள் ஆகியவற்றிலிருந்து உயிரி டீசல் உற்பத்திக்கான வழங்கல் சங்கிலி வழிமுறையை ஊக்கப்படுத்தும் வகையில் கொள்கைகள் வகுக்கப்பட்டுள்ளன.

## 9. பருத்தியில் இளஞ்சிவப்பு அந்து பூச்சி (Pink Bollworm)-இன் தாக்குதல் குறித்து விவாதிக்க

2017 - மார்ச் மாத பன்னாட்டு பருத்தி ஆலோசனைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையின் படி,

1) இந்தியா மிகப்பெரிய பருத்தி உற்பத்தி மற்றும் அதை ஏற்றுமதி செய்யும் இரண்டாவது மிகப் பெரிய நாடு.

2) குஜராத் இந்தியாவில் மிகப்பெரிய பருத்தி உற்பத்தி செய்யும் மாநிலமாகும். அதனை தொடர்ந்து மகாராஷ்டிரா இரண்டாவது இடத்தில் உள்ளது.

3) நாட்டில் பருத்தி பயிரிடும் பகுதிகள் இளஞ்சிவப்பு அந்து பூச்சின் தொற்றின் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளன.

**இளஞ்சிவப்பு அந்துப்பூச்சி தொற்றுக்கான காரணங்கள்**

a) பயிர் சுழற்சியின்மையால் பூச்சிகள் இனப்பெருக்கம் செய்வதை இது ஊக்குவிக்கிறது. ஆயிரத்திற்கும் மேற்பட்ட கலப்பினங்கள் பல வகைப்பட்ட பூக்கள் மற்றும் பழங்கள் தொடர்ந்து பூச்சிகளுக்கு உணவு கிடைத்தலை உறுதி செய்கின்றன.

b) வளர்க்க அனுமதிக்கப்படாத எதிர்ப்புத்தன்மை கொண்ட கலப்பினப் பயிர்கள் (Herbicide Tolerant Hybirds) விதைக்கப்படுகின்றன. மேலும் பி.டி. பருத்தி அல்லாதவற்றை பி.டி பருத்தி என்ற பெயரில் விதை நிறுவனங்கள் விற்பனை செய்கின்றன.

c) நீண்டகால (120 நாட்கள்) மற்றும் தொடர்ச்சியான பயிரிடுதல் காரணமாக இளஞ்சிவப்பு அந்து பூச்சிகள் பி.டி. பருத்தி எதிர்ப்புத்திறன் பெற்று விடுகின்றன.

d) விவசாயிகள் தரக்கட்டுப்பாட்டு நெறிமுறைகளை பின்பற்றாததுடன் பி.டி. பருத்தி விதைத்தலின் போது விதிகளை பின்பற்றுவதில்லை.

**தீர்வுகள்**

**புகலிட பயிர்**

a) பி.டி. பருத்தயின் பண்பு தூய்மைக்காக உறுதியான ஆராய்ச்சி மற்றும் மேம்பட்ட வசதிகளுடன் கூடிய நிறுவனங்களிலிருந்து மட்டுமே பரிந்துரைக்கப்பட்ட கலப்பினம் வழங்கப்பட வேண்டும்.

**முன்-சாகுபடி நடவடிக்கைகள்**

a) இளஞ்சிவப்பு அந்துபூச்சி அடுத்த பருத்தி பயிரிடும் காலத்திற்கு தேர்ந்தெடுத்த முதிர்ச்சியடைந்த விதைகளை அமிலத்தில் நனைத்து வெயிலில் 6-8 மணிநேரம் காயவைத்து, இரண்டு ஆழமான உழவிற்கு பின் பயிரிட வேண்டும்.

**அறுவடைக்கு-பின் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்**

a) பருத்தி சேமிப்பு கிடங்கிற்கு அருகில் அந்து பூச்சிகளை பிடிக்க பொறிகளை வைத்தல், அறுவடைக்கு பின் வயல்களிலிருக்கும் பசுமை இலைகளை கால்நடை மேய்ச்சல் அனுமதிப்பதன் மூலம் அழித்தல் மற்றும், எஞ்சிய பருத்தி பகுதிகளை அழித்தல், விவசாயிகளுக்கு கல்வி கற்பித்தல் மற்றும் விவசாய அறிவியல் முறைகளை மேம்படுத்துதல்.

**10. 5G என்றால் என்ன? அதன் நன்மைகள் மற்றும் சவால்கள் யாவை?**

a) 5G – ஒரு ரேடியோ அலைகள் அல்லது ரேடியோ அதிர்வெண் ஆற்றலை பயன்படுத்தி தரவுகளை அனுப்ப (அ) பெற உதவும் ஒரு கம்பியில்லா தொடர்பு தொழில் நுட்பமாகும்.

b) 4GLTE - யின் அடுத்த தலைமுறை செல்பேசி வலைப்பின்னல் தொழில் நுட்பமாகும்.

c) 5G சேவை 2024 - வாக்கில் முழுவீச்சில் வருகைதர உள்ளது.

**தொழில் நுட்ப விவரக்குறிப்புகள்** :

a) அதிக தரவு வீதங்கள் (1 ஜி.பி - ஹாட்ஸ்பாட்டிற்கு, 100 எம்.பி.பி.எஸ் மற்றும் 50 எம்பிபிஎஸ் பெரும் பரப்பு வலையமைப்பு)

b) மகத்தான இணைப்பு (1 சதுர கி.மீ தூரத்திற்கு ஒரு மில்லியன் இணைப்புகள்)

c) குறைவான தாமதம் (1 மில்லி செகண்ட்)

d) உயர் நம்பகத்தன்மை (99,999%)

e) அதிக வேகத்தில் இயங்கும் இயக்கம் (500 கி.மீ /மணி எ.கா அதிவேக ரயில்கள்)

**நன்மைகள்** :

a) விரைவான தரவு வேகம்

b) குறைவான தாமதம்

c) இணைய உலகப் பொருட்கள் (Internet of Things)

d) மருத்துவம்

e) விவசாயம்

f) திறன் கட்டமைப்பு

g) திறன் அளவீடுகள்

**சவால்கள்** :

a) பல்வேறு தரங்களை ஒருங்கிணைத்தல்

b) பொதுவான தளம்

c) கட்டிட உள்கட்டமைப்பு

d) தடைகள்

e) இந்திய சந்தையில் 4G சேவை முழுமையாக ஏற்கப்படவில்லை.

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

**அலைக்கற்றை கொள்கை** :

a) இந்தியாவின் அலைக்கற்றை ஒதுக்கீடு பொது கம்பியில்லா சேவைகளுக்காக கணிசமான அதிகரிக்கப்பட வேண்டும். மேலும், தனிநபர் வருடாந்திர உள்நாட்டு உற்பத்தியைப் பொறுத்து அலைக்கற்றை ஒதுக்கீடு செலவு அதிகரிக்கப்பட வேண்டும்.

**ஒழுங்குமுறைக் கொள்கை** :

a) மூன்று நிபுணர் குழுக்கள் வணிகம், பாதகாப்பு மற்றும் பாதுகாப்பு பிரிவுகளின் ஒழுங்குமுறைக் கொள்கையில் தெளிவான வழிகாட்டுதல்களை உருவாக்க உருவாக்கப்பட வேண்டும்.

## *15 மதிப்பெண் கேள்விகள்*

**1. பின்வருவனவற்றை விவரி.**

**i) 123-வது அரசியலமைப்பு சட்டத்திருத்த சட்டமுன்வரைவின் சிறப்புக் கூறுகள்**

a) சட்ட முன்வரைவு தேசிய பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்திற்கு, தேசிய தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர் ஆணையத்திற்கு சமமான அரசியலமைப்பு சட்ட அந்தஸ்தை வழங்கியுள்ளது.

**குடியரசுத் தலைவரின் அதிகாரங்கள்** :

a) பல்வேறு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் சமூக மற்றும் கல்வி ரீதியாக பின்தங்கிய வகுப்புகளை குடியரசுத் தலைவர் குறிப்பிடுவர்.

b) சம்பந்தப்பட்ட மாநில ஆளுநருடன் ஆலோசித்து இதனைச் செய்யலாம்

**ii) தேசிய பிற்படுத்தப்பட்டோர் ஆணையத்தின் பணிகள்**

a) அரசியலமைப்பு மற்றும் பிற சட்டங்களின் கீழ் பிற்பட்ட வகுப்பினருக்கு வழங்கப்படும் பாதுகாப்பு எவ்வாறு செயல்படுகிறது என்பதை கண்காணிக்க மற்றும் ஆய்வு செய்வதை இவ்வாணையம் உள்ளடக்கியது.

**அறிக்கை** :

a) தேசிய பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் குடியரசுத் தலைவருக்கு பிற்படுத்தப்பட்டவர்களின் பாதுகாப்பிற்கு செய்யும் பணிகளை ஆண்டு அறிக்கையாக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

b) இந்த அறிக்கைகள் நாடாளுமன்றம் மற்றும் சம்பந்தப்பட்ட மாநிலங்களின் சட்டப் பேரவைகளில் பட்டியலிடப்படும்.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

**உரிமையியல் நீதிமன்ற அதிகாரங்கள்** :

a) அரசியலமைப்பு சட்டதிருத்தத்தின்படி தேசிய பிற்படுத்தப்பட்டோர் ஆணையம் எந்தவொரு புகாரையும் உரிமையியல் நீதிமன்றம் போல் விசாரிக்கும் அதிகாரமுடையது.

b) மக்களுக்கு அழைப்பாணை அனுப்புதல், அவர்களை விசாரித்தல் மற்றும் உறுதி மொழி அளிக்க செய்தல் வேண்டும்.

c) தேவைப்படும் எந்த ஆவணங்களையும் தயாரித்தல் (அ) பொது அறிக்கை பெறல் மற்றும் ஆதாரங்களை பெறுதல் வேண்டும்.

**iii) மக்கள் பிரதிநிதித்துவ (திருத்த) சட்ட முன் வரைவு - 2017**

a) சேவை வாக்காளர்களின்படி, வெளி நாட்டு இந்தியர்களுக்கு "பதிலி வாக்களிப்பு" (Proxy Voting) வசதியை நீட்டித்தல்.

b) வெளிநாட்டு வாழ் இந்தியர்களை வாக்கு அரசியலில் வளர்ந்து வரும் சக்தியாய் அனுமதித்தல் வேண்டும்.

c) திருத்தச் சட்டம் மக்கள் பிரதிநிதித்தவம் சட்ட பிரிவு - 20A-ஆல் முன்வைக்கப்படும் "நியாயமற்ற கட்டுப்பாடுகளை" அகற்ற வழிவகுக்கிறது.

d) வெளிநாட்டு வாக்காளர்கள் வாக்களிக்க அவர்களின் வாக்காளர் பட்டியல் உள்ள தொகுதிக்கு உடல் ரீதியாக வருகை தந்திருத்தல் அவசியத் தேவை.

e) சட்டத்தின் 20-A பிரவு, வாக்காளர் பட்டியலில் வாக்காளர்களை பதிவு செய்து ஒட்டு மொத்த வாக்காளர் பட்டியலில் வெளி நாட்டுவாழ் இந்தியர்களை இணைக்கிறது.

f) வாக்காளர்கள் விதிகள் பதிவு - 1960 வெளிநாட்டு வாக்காளர்களுக்கு தங்கள் தொகுதிகளில் உள்ள வாக்காளர் பட்டியலில் பதிவு செய்ய வழிவகுக்கிறது.

g) கடவுச்சீட்டு மற்றும் செல்லத்தக்க விசாவின் சுய சான்று அளித்தல் (Self attested) நகல்களின் அடிப்படையில் ஒருவர் குறிப்பிட்ட வாக்கு சாவடியில் வாக்களிக்கும் போது அசல் கடவுச் சீட்டு காண்பித்து பதிலி வாக்கை பதிவு செய்யமுடியும்.

h) வாக்களிக்கும் நாளில் இந்தியாவிலுள்ள தங்கள் வாக்குச் சாவடிகளில் வெளி நாட்டு வாக்காளர்களை (உடல் ரீதியாக வருகை) (Physical Prensence) இருப்பதை கோருதல்.

i) வெளிநாட்டு வாக்காளர்களுக்கு இதன் காரணமாக கஷ்டம் ஏற்படுகிறது.

j) பதிலி வாக்களிப்பு, அயல் வாக்களிப்பு முறையை எளிதாக்குதல் போன்ற திருத்த முன்மொழிவுகள் முலம் வெளிநாட்டு வாக்காளர்கள் அவர்கள் இடத்திலிருந்து பதிலி வாக்காளர் மூலம் வாக்களிக்கலாம்

**2. குற்றவியல் சட்டம் (திருத்தம் மசோதா) - 2018 - மதிப்பிடுக.**

**நோக்கம் :**

a) நாடாளுமன்றம், குற்றவியல் சட்டம் (திருத்தம்) மசோதா-2018 ஐ நிறைவேற்றியுள்ளது.
b) இந்திய குற்றவியல் சட்டம், சாட்சி சட்டம், குற்றவியல் நடைமுறைச் சட்டம் மற்றும் குழந்தைகளை பாலியல் வன்கொடுமையிலிருந்து தடுக்கும் சட்டம் (போஸ்கோ) சட்டம் ஆகியவற்றில் திருத்தம் செய்வதே இதன் சிறப்பு கூறுகளாகும்.
c) சில குற்றங்களுக்கு மரண தண்டனை வழங்கும் புதிய ஏற்பாட்டை அறிமுகப்படுத்துகிறது.

**சட்டமுன்வரைவின் சிறப்பு கூறுகள் :**

**தண்டனை :**

a) இது 12-வயதுக்குட்பட்ட பெண்களை பாலியல் வன்கொடுமை செய்பவர்களுக்கு மரண தண்டனை உட்பட்ட கடுமையான தண்டனை வழங்குகிறது.
b) பெண்களை வன்புணவர்களின் குறைந்தபட்ச தண்டனை 7 முதல் 10 ஆண்டுகளிலிருந்து ஆயுள்கால கடுங்காவல் தண்டனையாக நீட்டிக்கப்படுகிறது.
c) 16-வயதுக்கு கீழுள்ள பெண்களை வன்புணர்வு செய்பவர்களுக்கு 10 ஆண்டுகளிலிருந்து 20 ஆண்டாக உயர்த்தப்பட்டுள்ளது. வாழ்நாள் முழுவதும் சிறை தண்டனை நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது.
d) 16-வயதுக்குக்குள்ள பெண்களை வன்புணர்ந்தவர்களுக்கு வேறுபாடின்றி எஞ்சிய வாழ்நாள் முழுவதும் குற்றவாளி சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டும்.
e) 12-வயதுக்கு கீழுள்ள சிறுமிகளை வன்புணர்தவர்களுக்கு குறைந்தபட்ச கடுங்காவல் தண்டனை 20 ஆண்டுகளிலிருந்து வாழ்கின்ற (அ) மரண தண்டனை ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.
f) 12-வயதுக்கு கீழுள்ள சிறுமியை கூட்டாக வன்புணர்பவர்களுக்கு வாழ்நாள் முழுவதும் சிறை (அ) மரணதண்டனை அளிக்கப்படும்.

**விரைவான விசாரணை :**

a) விரைவான விசாரணை மற்றும் சோதனை கால அளவை வழங்குகிறது.
b) அனைத்து பாலியல் வன்புணர் வழக்குகளிலும் விசாரணை செய்யப்படுபவதற்கான கால அளவு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இது இரண்டு மாதங்களுக்குள் கட்டாயமாக நிறைவு செய்யப்பட வேண்டும்.
c) அனைத்து வன்புணர் வழக்குகளிலும் விசாரனை முடிவடைவதற்கான காலக்கெடு இரண்டு மாதங்களாகும்.
d) பாலியல் வன்புணர்வு வழக்குகளில் மேல்முறையீடு செய்வதற்கான கால வரம்பு ஆறு மாதமாக பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

**பிணை தொடர்பான விதிகள்**

a) 16 வயதுக்குட்பட்ட பெண்களை பாலியல் வன்புணர்வு (அ) கூட்டு வன்புணர்வு செய்பவர்கள் முன் ஜாமீன் வழங்க எந்த விதியுமில்லை.
b) 16 வயதிற்கு உட்பட்ட ஒரு பெண் கற்பழிப்பு வழக்கில் நீதிமன்றம் முன் ஜாமீன் தருவதற்கு 15 நாட்களுக்கு முன்பு ஒரு பொது வழக்கறிஞர் மற்றும் பாதிக்கப்பட்டவரின் பிரதிநிதியிடம் அறிவிக்க வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

**கடுமையான ஒரு சட்டம் தேவை :**

a) 2015-ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2016-ல் இந்தியாவில் 85% குழந்தைகள் மீதான கற்பழிப்பு வழக்குகள் பதிவாகியுள்ளன.
b) வன்முறை சூழ்நிலை, சமூக மற்றும் பொருளாதார பாதுகாப்பற்றத் தன்மை அந்நியப்படுத்தல் போன்றவற்றை பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான வேகமாக மறையச் செய்வதன் மூலம் பெண்களுக்கு எதிரான குற்றங்களை அகற்றலாம்.
c) எனவே, சட்ட அமைப்பானது நாடு முழுவதும் 12 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் மீதான வன்புணர்வை கருத்தில் கொண்டு அதை மிக கொடூர குற்றமாக அறிவித்துள்ளது.
d) அத்தகைய குற்றங்களுக்கு மரண தண்டனை விதிக்க சமிக்ஞை (சிக்னல்) அளிக்கின்றன.

**இவை போதுமானவையாக இருக்கிறதா?**

a) புள்ளி விவரங்கள் மரண தண்டனையை ஒரு தடையாக நிரூபிக்க (அ) நிரூபிக்க முடியவில்லை.
b) 1965 ஆண்டில் ஐக்கிய இராச்சியத்தில் (U.K) கொலைக்கு மரண தண்டனை நீக்கப்பட்டதிலிருந்து கொலை அதிகாரத்துள்ளதை காட்டுகிறது. 1976-ல் கனடா மரணத் தண்டனையை இரத்து செய்தது. எவ்வித தாக்கம் ஏற்பட்டதையும் காண முடியவில்லை.

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

c) ஒரு சமூகத்தின் சமூக பொருளாதார காரணங்கள் குற்றங்கள் ஏற்படுவதில் தாக்கத்தை சட்டத்தினை காட்டிலும் அதிகமாகவோ (அ) குறைவாகவோ நிகழச் செய்கின்றன.

**தேவைகள்** :

a) கடுமையான தண்டனையில்லாத ஆனால் நிச்சயமான மற்றும் சீரான தண்டனையோ குற்றங்களை குறைக்கும்.
b) மரண தண்டனை ஒரு தடையாக வேலை செய்யும் போது, விசாரணையில் நியாயத் தன்மையும், குற்றத்தின் நிச்சயத்தன்மையும் விரைவான விசாரணையும் மிக முக்கியம்.
c) எனவே சட்ட அமைப்பு தெளிவான குறியீட்டினை நாடு தழுவிய அளவில் 12-வயதுக்குட்பட்ட பெண்கள் கற்பழிப்பினை மிக கொடூர குற்றமாக அறிவித்துள்ளது.
d) காவல் துறை சீர்திருத்தம் மற்றும் விரைவான நீதிமன்றம் இதன் ஒரு பகுதியாக இல்லாத போது மரணத் தண்டனையை ஒரு தடையாக காணும் மதிப்பு குறையக் கூடும். 12 வயதுக்குட்டபட்ட பெண்களை வன்புணர்வு செய்யும் குற்றவாளிகளுக்கு மரணத் தண்டனை என்ற சட்டமுன்வரைவை இராஜஸ்தான் மற்றும் மத்திய பிரதேச மாநிலங்கள் நிறைவேற்றியுள்ளன.

## 30 மதிப்பெண் கேள்விகள்

1. **மாநில பேரிடர் மேலாண்மை திட்டம் (SDMP)-2018-2030 - விரிவாக்குக.**

**விரிவான பார்வை**

a) பாதுகாப்பான மற்றும் பேரிடர் தடுக்கும் ஒரு தமிழ்நாட்டை கட்டமைத்தல்
b) அமைப்பு ரீதியான அணுகுமுறை
c) உள்ளடக்கிய வளர்ச்சி
d) மாநிலத்தின் வளர்ச்சி பண்பாட்டில் பேரிடர் ஆபத்தினை முதன்மையாக கருத்தில் கொள்ளல்

**குறிக்கோள்** :

a) நீடித்த பேரிடர் ஆபத்து குறைப்பு மற்றும் சமூக எதிர்நிற்றல் திறன் அதிகரிப்பிற்காக அமைப்பு ரீதியான அணுகுமுறைக்கு தகவமைத்து கொள்ளல்.
b) ஆபத்து குறைத்தலில் இயற்கை வளங்கள் பாதுகாப்பின் மீது கவனம் செலுத்தல்



SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

1) நீர்ப்பாசன அடிப்படையில்
2) விரிவான ஆற்றுப் பலவீனமான பகுதிகளில் நீடித்த மேலாண்மை
3) சுழல் ரீதியாக பலவீனமான பகுதிகளில் நீடித்த மேலாண்மை
4) நிலையான வேளாண் வளர்ச்சி
5) பேரிடரை முதன்மையாகக் கொண்ட வளர்ச்சி திட்டங்கள்
6) பாதிக்கப்பட்ட பகுதிகளில் சமூகங்களை உள்ளடக்கிய மற்றும் ஒருங்கிணைந்த வளர்ச்சி.

**பேரிடர் நிலைகள்**

a) நிலை 1
b) நிலை 2
c) நிலை 3


**நெருக்கடி மேலாண்மை**

a) தேசிய நெருக்கடி மேலாண்மைத் திட்டம்
b) மாநில நெருக்கடி மேலாண்மைப் பிரிவு
c) மாவட்ட நெருக்கடி மேலாண்மை பிரிவு
d) மாவட்ட பேரிடர் மேலாண்மை ஆணையம்
e) மாநில அவசர நடவடிக்கை மையம் (SEDC)
f) மாவட்ட அவசர நடவடிக்கை மையம் (DEOC)
g) தாலுகா / பிரிவு / மண்டல அளவில் பேரிடர் மேலாண்மை குழு.
h) பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு துறைகளுக்கிடையேயான மண்டல குழுக்கள்
i) கிராம / வார்டு அளவில் பேரிடர் மேலாண்மை குழு

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

## தமிழ்நாடு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம்

தலைவர்: முதலமைச்சர் - மாநிலத்தின் பேரிடர் மேலாண்மை செயல்களை கண்காணித்தல்.




### பேரிடர் தயார்நிலை :

1) தீங்கு, பாதிப்பு மற்றும் ஆபத்து மதிப்பீடுகள்
2) பாதிக்கப்படக் கூடிய பகுதிகளை அடையாளம் காணல்
3) பாதிக்கப்பட்ட பகுதிக்கு வரைபடம் தயாரித்தல்
4) ஆரம்ப எச்சரிக்கை மற்றும் செய்தி பரவல் அமைப்புகள்
5) அமைப்பை கட்டமைத்தல் மற்றும் ஒருங்கிணைப்பு
6) பொதுக் கல்வி, பயிற்சி மற்றும் ஒத்திகை
7) ஆதாரங்களை திரட்டுதல்.

### பேரிடர் வகைகள்

1) வெள்ளம்
2) சுனாமி
3) புயல்
4) வறட்சி
5) வெப்ப அலைகள்
6) நிலச் சரிவுகள்

7) நிலநடுக்கங்கள்
8) வேதி தொழிற்சாலை பேரிடர்
9) அணு மற்றும் கதிர்வீச்சு
10) அவசரகால காட்சிகள்

**பேரிடர் தடுப்பு மற்றும் மட்டுப்படுத்துதல் :**

| கட்டமைப்பு ரீதியான நடவடிக்கைகள் | கட்டமைப்பு அல்லாத நடவடிக்கைகள் |
|---|---|
| **புகலிடம்**<br>1) பேரிடர் தடுப்பு வீடுகள்<br>2) பல பயன்பாட்டு மீட்பு புகலிடங்கள் | **பொருளாதார நடவடிக்கைகள்**<br>1) பலதரப்பட்ட பொருளாதார நடவடிக்கைகள்<br>2) மானியங்கள்<br>3) கடன் தள்ளுபடி |
| **நீர் ஆதாரங்கள்**<br>1) ஆற்றுபாசன அமைப்பை மறுசீரமைத்தல்<br>2) ஆற்றுதரப்படுத்தல் / வெள்ளவழி<br>3) வாய்க்கால் சீரமைப்பு | **ஆபத்து மாற்றம்**<br>1) காப்பீடு<br>2) கடன் மற்றும் வரி கொள்கைகள் |
| **உள்கட்டமைப்புகள்**<br>1) சாலைகள்<br>2) பாலங்கள்<br>3) குடிநீர்<br>4) ஆற்றல்<br>5) தொடர்பு<br>6) கல்வி<br>7) பாரம்பரியம்<br>8) சுற்றுலா | **சமூக நடவடிக்கைகள்**<br>1) பொது தகவல் பிரச்சாரம்<br>2) முறையற்ற கல்வி<br>3) சமூக பங்களிப்பு<br>**நிலத் திட்ட நடவடிக்கைகள்**<br>1) நிலப் பயன்பாட்டு திட்டங்கள்<br>2) வடிவமைக்கப்பட்ட பாதுகாப்பு<br>3) இணைத்தல் |
| **சூழலியல் அமைப்பு சீரமைத்தல்**<br>1) கடற்கரையோரம் அரிப்பு தடுப்புகளை உயரேற்றுதல்<br>2) காடு வளர்ப்பு<br>3) வலுவில்லாத சூழலின் பகுதிகளை சீரமைத்தல் (சதுப்பு நிலங்கள்)<br>4) சூழலியல் நலனை உயர்த்துதல். | **பாதுகாப்பு தணிக்கை**<br>1) பொது உள்கட்டமைப்பு பேரிடரை எதிர்கொள்ளல் (கட்டிடங்கள், சாலைகள், நீர்நிலைகள் மற்றும் அணைகள்)<br>**மேலாண்மை மற்றும் அமைப்பு ரீதியான நடவடிக்கைகள்**<br>1) (கல்வி பயிற்சி - பள்ளி / கல்லூரி பேரிடர் ஆராய்ச்சி தொழில் நுட்ப |

| | |
|---|---|
| | நிபுணத்துவத்தை பலப்படுத்தல், உள்ளூர் ஆணையத்தை பலப்படுத்தல்) |

**இயற்கை வளங்கள் பாதுகாப்பு திட்டங்கள்** :

வறட்சி, வெள்ளம், நிகழ்ச்சிகள், வெப்ப அலைகள் மற்றும் பருவநிலை தாக்கத்தை போக்குதல்

1) குடிமராமத்து
2) மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு உறுதி திட்டம் -
3) நீர்படுகை மேம்பாடு
4) சிறப்பு பகுதி மேம்பாட்டு திட்டங்கள்
5) ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாடு
6) நுண் நீர் பாசனம்
7) மழை நீர் சேகரிப்பு
8) செயற்கை நிலத்தடிநீர் சேமிப்பு
9) புதிய பாசனத் திட்டங்கள்
10) கடல் நீர் உட்புகுதலை தடுத்தல்

**நிதிகள்** :

**a) மத்திய அரசு நிதி**

1) இந்திய அரசிடமிருந்து திட்ட நிதிகள்'
2) மாநில மேம்பாட்டு நிதி
3) துறை சார்ந்த குறிப்பிட்ட திட்ட நிதி
4) திட்டநிதி / பன்னாட்டு அமைப்புகளின் சுலப கடன்கள்

**மாநில அரசு நிதி** :

1) மாநில பேரிடர் பொறுப்பு நிதி
2) மாவட்ட பேரிடர் பொறுப்பு நிதி
3) மாநில பேரிடர் மட்டுப்படுத்தல் நிதி
4) மாவட்ட பேரிடர் மட்டுப்படுத்தல் நிதி

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

# Where We want to be in 2030

## Understanding Disaster Risk

- Hazard Risk & Vulnerability Assessment and Mapping for all major – Natural as well as man-made disasters.
- Big Data Analytics based Risk Assessment
- Comprehensive Flood Mitigation through appropriate interventions aided by Mapping of Flood Prone River Basins with Unmanned Aerial Vehicle (UAV)
- Integrated Coastal Zone Management Plan (ICZMP) for Village level planning
- State Data Base on Emergency Management



## Strengthening Disaster Risk Governance

- Incident Response System (IRS)
- Strengthening and Capacity Building of TNDRF
- Modernisation of Fire and Rescue Services
- Inter Departmental Zonal Teams
- Multi Stakeholder Participation
- Disaster Response Guards to provide service in all vulnerable areas
- First Responders including Women in Vulnerable areas.

## Investing in Disaster Risk Reduction

### Structural Measures

- Flood resistant Thiruvallur, Kancheepuram, Cuddalore, Nagapattinam, Thoothukudi, Ramanathapuram and Kanyakumari Districts.
- Flood resistant Urban pockets of Chennai, Tambaram, Cuddalore&Nagapattinam Districts etc.
- Restoration and protection of fragile ecosystems
- Prevention of Sea water intrusion
- Enhanced storage of water bodies [Desilting of water bodies (G.O. Ms. No. 50) and Kudimaramathu]
- Conversion of over exploited and critical aquifers into safe categories
- Enhancement of bio-shields in coastal ecosystems
- Climate resilient Hydraulic Infrastructures
- Promotion of sustainable Agricultural practices in Rain fed areas for drought and climate mitigation.
- Integrated development of Vulnerable areas.

### Non Structural Measures

- Risk Transfer (enlarging Insurance cover – PMFBY)
- Encouraging Private Participation (CSR)
- Non-structural measures (CMDA - Master Plan 2030 with Land use Regulation & Directorate of Town and Country Planning – (land use and building regulation)
- Disaster Risk Reduction to become a new norm in all projects

Systems Approcah for Risk Reduction



## Enhancing Disaster Preparedness for effective response and Build Back Better

### Disaster Preparedness

- Real-time Forecasting with Tamil Nadu system for Multi – Hazard Potential Impact Assessment and Emergency Response Tracking (TN - SMART)
- Chennai Flood Warning System (C-FLOWS) – a forecast based and real-time flood warning system for Chennai up to ward level
- Real Time Flood Forecasting and Spatial Decision Support System for Adyar, Cooum, Kosasthalaiyar Rivers, Kovalam Basins, other River basins in Coastal and Non Coastal Districts
- Storm Surge Model based on Geo Spatial Technology for real-time warning
- Use of Social Media, Mobile Technologies, Satellite Telephony, HF sets, NavIC, Navtex and Distress Alert Transmitters in Risk Communication

### Build Back Better

- Coastal Disaster Risk Reduction Project (CDRRP)
- Multi Purpose Evacuation Shelters (MPES)
- Multi Hazard Resistant Houses
- Chief Minister's Solar Powered Green House Scheme (CMSPGHS)
- Tamil Nadu Irrigated Agriculture Modernisation Project (TNIAMP)
- Climate Change Adaptation Programme with ADB assistance in Delta Districts viz., Thanjavur, Nagaapattinam and Thiruvarur
- Sustainable Mission for Dryland Agriculture.

2. **பின்வருவனவற்றை விளக்குக.**

**பெண்களை இழிவாக காட்சிபடுத்துவதை (தடுத்தல்) சட்டம் - 1986 ஆராய்க.**

**1. திருத்தச் சட்டம்**

a) திருத்தச்சட்டம், டிஜிட்டல் வடிவம், மின்னணு வடிவம், பொது இடங்களில் பெரிய திரை போன்ற காட்சிப்படுத்தும் பேனர்கள் (அ) குறுஞ்செய்தி வழி விளம்பர பல்லூடக செய்தி உள்ளிட்ட விளம்பரங்களை வரையறுத்துள்ளது.

b) திருத்தச்சட்டம் வெளியீடு உரிமம் (அ) கணினி ஆதாரத்தைப் பயன்படுத்தி (அ) தகவல் தொடர்பு சாதனம் மூலம் பதிவேற்றத்தை வரையறுக்கும் புதிய வரையறையை சேர்ப்பதற்கு வழிவகுக்கிறது.

c) திருத்தச் சட்ட பிரிவு - 4ன்படி எந்தவொரு நபரும் பெண்ணை இழிவாக காட்சிப்படுத்துதல் கூடாது.

d) தகவல் தொழில் நுட்ப சட்டம் - 2000 கீழ் கொடுக்கப்படும் தண்டனையைப் போல் தண்டிக்கப்படுவர்.

e) தேசிய மகளிர் ஆணையத்தின் கீழ் ஒரு மையப்படுத்தப்பட்ட ஆணையம் உருவாக்கப்படும்.

f) தேசிய மகளிர் ஆணைய செயலர் தலைமையில் விளம்பர தரக்கட்டுப்பாட்டு குழு இந்திய பத்திரிக்கையாளர் சங்கம், தகவல் மற்றும் ஒளி பரப்பு அமைச்சகம் மற்றும் பெண்கள் பிரச்சனையில் அனுபவமுள்ள ஒருவரைக் கொண்டிருக்கும்.

**பணிகள்**

a) இந்த மையப்படுத்தப்பட்ட ஆணையம் எந்தவொரு நிகழ்ச்சி மற்றும் நிரல் மற்றும் விளம்பர ஒளிபரப்புகள் மற்றும் வெளியீடு (அ) புகார்கள் / குறைகள் பெண்களை இழிவாக காட்சிப்படுத்தியிருக்கும் அனைத்து விவரங்களை விசாரிக்கவும், ஆய்வு செய்யவும் அதிகாரம் பெற்றிருக்கும்.

**சட்டத்தினை மறுபரிசீலனை செய்ய தேவை**

a) விளம்பரங்கள், பிரச்சாரங்கள், எழுத்துக்கள், ஓவியங்கள், படங்கள் (அ) வேறு எந்த வடிவிலும் பெண்களை இழிவாக பிரதிநிதித்துவப்படுத்துவதை இந்திய அரசு பெண்களை (தடுத்தல்) இழிவாக காட்சிப்படுத்தல் சட்டம் 1986-ல் சட்டமியற்றியுள்ளது.

b) சட்டம் நிறைவேற்றிய பின்னர், தொழிற் புரட்சி வளர்ச்சியின் விளைவாக இணையம், பல்லூடக செய்தி, கேபிள் தொலைக்காட்சி சேவைகள் மற்றும் செயலிகள் (எ.கா) வைபர், ஸ்கைப், கட்செவி

அஞ்சல், சாட்ஆன், இன்ஸ்டாகிராம் மற்றும் பிற புதிய வடிவில் வந்துள்ளது.

c) எனவே இந்த தொழில்நுட்ப வளர்ச்சிகளால் சட்டத்தினை விரிவுப்படுத்துவது அவசியமாக உள்ளது. எந்த வகையிலும் / வடிவிலும் பெண்களை இழிவாக காட்சிப்படுத்துவதை தடுப்பதற்கு சட்டத்தினை பலப்படுத்த வேண்டியுள்ளது.

**2. பெண்கள் பணிபுரியுமிடங்களில் பாலியல் சீண்டல்களை (தடுத்தல் தடைசெய்தல் மற்றும் குறைதீர்த்தல்) சட்டம் - 2013 - முக்கிய விதிகளை பட்டியலிடுக.**

a) பணிபுரியுமிடங்களில் பாலியல் துன்புறுத்தல்கள் மற்றும் புகார்களை குறைப்பதற்கான ஒரு வழிமுறையை உருவாக்கியுள்ளது.

b) இது தவறான மற்றும் தீங்கிழைக்கும் குற்றச்சாட்டுகளுக்கு எதிராக பாதுகாப்பை வழங்குகிறது.

c) சட்டத்தின் கீழ் அமைப்பு, அமைப்புசாரா துறைகளிலும் அனைத்து வகையான பெண்களையும் வயது வேறுபாடு இன்றி உள்ளடக்கியது.

d) விசாகா குழு வழிகாட்டுதலின் படி "பணியிடம்" என்பது ஒரு முதலாளி - தொழிலாளி (Employer - Employees) உறவு மரபு வழிகாட்டுதலின் படி இருக்கும்.

e) இச்சட்டம் அமைப்புகள், துறைகள், அலுவலகம், கிளைகள் பிறவற்றை உள்ளடக்கியது. பொது, தனியார் துறை, அமைப்பு மற்றும் அமைப்புசாரா, மருத்துவமனைகள், கல்வி நிறுவனங்கள், விளையாட்டு அமைப்புகள், மைதானங்கள், விளையாட்டு அரங்கங்கள் மற்றும் தொழிலாளர் பணிநிமித்தம் பயணம் செய்வது போன்றவற்றை உள்ளடக்கியது.

f) 10 அல்லது அதற்கு மேற்பட்ட ஊழியர்களை கொண்ட ஒவ்வொரு அலுவலகமும் (அ) கிளைகளும் ஒரு உள்ளூர் புகார் குழு அமைக்க வேண்டும்.

g) ஒவ்வொரு மாவட்டத்திலும், மாவட்ட அதிகாரி உள்ளூர் புகார் குழுவை அமைக்க வேண்டும்.

**குழுவின் பணிகள்**

h) புகார் பற்றி குழுவானது 90 - நாட்களுக்குள் விசாரணையை முடிக்க வேண்டும். விசாரணை முடித்தபின் 60 நாட்களுக்குள் அவற்றின் மீது நடவடிக்கை எடுக்க மாவட்ட அதிகாரிக்கு (அ) முதலாளிக்கு அறிக்கை அனுப்பப்படும்.

**அதிகாரங்கள்**

i) புகார் குழுக்கள் சான்றுகளை / ஆதாரங்களை பெற உரிமையியல் நீதிமன்ற அதிகாரங்களைக் கொண்டுள்ளது. புகார்தாரர் விசாரணைக்கு முன் சமாதானத்தை கோரினால் புகார் குழு சமரசம் வழங்க வேண்டும்.

**தண்டனைகள்: தொழிலாளிக்காக பரிந்துரைத்தல்**

j) சட்டத்தின் விதிமுறைகளுக்கு இணங்காமல் இருத்தலுக்கு ரூ.50,000 அபராதம் விதிக்கப்படும். மீறி தவறு செய்தால் அதிக அபராதங்கள் விதிக்கப்படும் (அ) உரிமம் (அ) வணிக நடத்த உரிமம் ரத்து செய்யப்படும்.

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS